905

தி 6.] 1927௵ ஜூலை௴ 1௳ [பகுதி 6.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...மணிசாமி முதலியார்,
...னந்த நிலயம், சென்னை.

AUG 1927
JL
n211,N122m
N1276.6.
18656

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே. வெளிவரும் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927௵ ஜனவரி௴த்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு சென்ற எப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. இப்போது கடற் கொள்ளைக்காரன் என்ற நாவல் ஆரம்பமாகி நடந்து வருகிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927௵ ஜனவரி௴த்தில் தொடங்கப்பட்ட "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். 1928௵ ஜனவரி௴ வரை வெளிவரும் மற்ற நாவல் சஞ்சிகைகளும் அனுப்புப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| **அர்ஜுனஸிங், சுந்தர்** | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

13 AUG 1927
MADRAS

நாகம்:—குழந்தாய்! நீ யிப்படிக் கூறுவதால் உனக்கு நீயே நீதி தவறி நடக்கிறவனாகிறாய். அதோடு மீனாளுக்கும் புனிதவதிக்குங்கூட அநீதி செய்கிறாய். நீ அந்த ஹாக்கரின் பேச்சை யப்படியே நம்பிக்கொள்ளலாகாது. அவன் தன் சுயநலத்தில் நோக்கங்கொண்டு எப்படி வேண்டுமாயினும் சமயத்திற்குத் தக்கபடி பேசுவான். அவன் வார்த்தைகளை நம்பிக்கொண்டு ஒருவர் மேலும் எவ்வித அபிப்பிராயமும் நீ கொள்ளலாகாது. தைரியநாதனுக்கு உன் மேலிருந்த நல்ல அபிப்பிராயம் அப்படிக் குறைந்துபோனது உண்மையாக விருக்கும்பட்சத்தில் அதற்கு இந்தச் சுந்தரம்பிள்ளையே ஒரு காரணமாக விருக்கவேண்டும். இது உண்மை. நான் அவனை யெப்படியும் பிடித்து விடுவேன். அவன்மேல் கண்வைத்தே யிருக்கிறேன்.

முரு:—ஏனம்மா! இப்போது நீ என்னிடம் கூறிய சங்கதியைத் தைரியநாதரிடம் ஏன் கூறியிருக்கலாகாது?

நாகம்:—ஏனெனில், தங்கள் மூடத்தனத்தையே பெருமையாய் மதித்துக் கொள்கிறவர்களுக்குத் தாங்களே பட்டபின்தான் புத்தி வரவேண்டும். நான் நேற்றுத்தான் தைரியநாதனைக் கண்டு அவனுக்குப் புத்தி கூறினேன். நான் கூறியதற்கு அவன் என்ன பதிலளித்தான் தெரியுமா? "நாகம்மா! நீ மிக்க கிழமாய் விட்டாய்" என்று சொன்னான். அவன் எனக்கு எத்தனையோ விதங்களில் கடமைப்பட்டவன்; நெருங்கிய சம்பந்தமுடையவன்; அப்படிப்பட்டவன் என்னை யிம்மாதிரி யலட்சியமாய்க் கூறினான். அவன் எப்போது மூத்தோர் வார்த்தைகளை யவமதித்தானோ



186516

அப்போதே அவன் இளையோரால் புத்தி கற்பிக்கப் படவேண்டும். அவனுடைய முட்டாள் தனத்தின் பயனை யவன் அனுபவிக்கட்டும் என்று நாம் விட்டு விடாமலிருப்பதே அவனுக்குப் பெரிய நன்மை செய்ததாகும். ஆகையால் குழந்தாய்! நீ அந்த விருந்தினன்று சாதாரணமாகச் செல்வது போல் வசந்தமாளிகைக்குச் செல்.

**முருகப்பன்:**—அம்மா! எனக்கு அழைப்புச்சீட்டு வர வில்லையே. நான் வரவேண்டுமென்று அவர்கள் விரும்பவில்லை. என்னைப்பற்றி நினைக்கவுமில்லை. ஒரு சமயம் நான் வலிய அங்குச் சென்றாலும் அவர் கள் என்னை நிராகரித்து விடக்கூடும். அப்படி யிருந்தும், அம்மையே! நான் அங்கு செல்வதாகவே எண்ணங்கொண்டிருந்தேன். இந்த உண்மையை யுன்னிடம் கூறினேன்.

**நாகம்மாள்:**—"நீ செய்த யோசனை சரியானதே. நாம் உண்மையான சினேகராயின், நம் சிநேகர் தேகத்தில் வியாதியுற்றிருக்கையில் அவர்கள் அழைக்காதிருக் கையிலேயே வலியச்சென்று அவர்களுக்கு உதவி செய்கிறோம். அப்படியிருக்க அவர்கள் மனோவியாதி யுற்றிருக்கையில் நாம் சென்று உதவிசெய்யவேண்டி யது மிக்க அவசியமல்லவா? ஏனெனில் அச்சமயத் தில் அவர்கள் புத்திமயக்கங்கொண்டு நம்மை மறந்து விடுகிறார்கள். நாம் ஆபத்தான நெறியிற் செல்கிறோ மென்றும் அச்சமயம் அவர்கள் உணர்வதில்லை. ஆகை யால் குழந்தாய்! நீ அவசியம் செல். பெரும்பாலும் நாம் அங்கு சந்திப்போம். இடையில் நமது பாதை கள் வெவ்வேறாகவிருக்கின்றன. கடவுள் உனக்கு நல்லாசி புரிவார்" என்றாள்.

சென்னை-600 008

அதன் பிறகு நாகம்மாள் அங்கிருந்து சென்றாள். முருகப்பன் அவள் சற்றுதூரம் சென்று ஒரு சந்தில் மறைகிறமட்டும் அந்த விடத்திலிருந்தபடி அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்து, பிறகு அவள் மொழிப்படி நடப்பதென்ற தீர்மானத்தோடு வீட்டிற்குத் திரும்பினான்.

கடைசியில் விருந்துநாளும் நெருங்கியது. அதுவரையில் முருகப்பனுக்கு அழைப்புச்சீட்டு வரவில்லை. கொஞ்சகாலத்திற்கு முன் வரையில் அவனையன்றி யவ்வீட்டில் எவ்விதவிருந்தும் நடவாது. இதோடு வருகிறவர்கள் போகிறவர்களெல்லாம் காப்டன் குலசேகரன் அக்குடும்பத்தில் தைரியநாதம் பிள்ளையாலும் அவர் புத்திரிகளாலும் மிக்க செல்வாக்கோடு நடத்தப்படுவதைப் பற்றியேயவனிடம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். வீட்டுக் காரியஸ்தியாகிய சுந்தரம்மாளும், ஹாக்கரும் அவனைநோக்கி, "நீ அலைகளால் அடித்துக்கொண்டு போகவிருந்த அப்புதுஆளை வலியக்காப்பாற்றியது பெருந்தவறு. இங்கு யாரும் அத்தகைய முட்டாள் தனமான காரியத்தைச் செய்யமாட்டார்கள். உனக்கு எச்சரிக்கை செய்யப்பட்டும் நீ அதை நிராகரித்து அவனைக் காப்பாற்ற முன்னின்றதால் அவன் உனக்கே தீங்கிழைக்க நேர்ந்தான்; அத்தகைய சமயத்தில் உதவி செய்யாமல் பேசாமலிருப்பது தான் நலம். அத்தகைய உதவி செய்தவர்கள் எவருக்கும் நன்மையுண்டானதில்லை" என்றார்கள்.

அதன்மேல் ஹாக்கர் தனியாக "உண்மையாகவே நான் கூறுகிறேன். கப்பற் சேதமடைந்து கடலில் தத்தளிப்பவனிடம் ஒரு மரக்கட்டையை எறிந்து அவன் பிழைக்கும்படி செய்வதைவிடப் பேசாமலிருந்து விடுவதுதான் நன்னடக்கை. அத்தகையோரைக் காப்பாற்றியவர்களில் ஒருவரும் க்ஷேமமடைந்ததில்லை" என்றான்.

சுந்தரம்மாள் ஹாக்கரைநோக்கி "நீ நல்ல புத்திசாலி; ஒரு மனிதனுக்கு எப்போது உதவி செய்யவேண்டுமென் பது உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது" என்றாள்.

ஹாக்கர்:—நான் இத்தீவில் நெடுநாள் அனுபோகமுடையவன். இத்தீவின் பூர்வீக மனிதர்கள் என்ன புத்தி கூறினார்களென்பது என் மனதில் நன்றாகப் பதிந்திருக்கிறது. ஒரு மனிதனுக்கு ஆபத்தில் உதவி செய்வதில் என்னைவிட அதிகமாய்த்துணிகிறவன் எவனுமில்லையென்று தற்பெருமையின்றி நான் கூறுவேன். ஆனால் ஒருவன் கப்பற்சேதப்பட்டுத் தவிக்கிறான் என்றால் அது வேறு விஷயம்" என்றான்.

சுந்தரம்மாள்:—ஆயினும் இந்தத் தைரியநாதம் பிள்ளை புதிதாய் வந்த அக்குலசேகரனைத் தன் குடும்பத்தில் முதல்தர கௌரவத்தோடு நடத்துவது எனக்குச் சரியானதாகத் தோன்றவில்லை.

ஹாக்கர்:—ஆம். அதனால் அவன் ஒருபோதும் நன்மையடையமாட்டான் என்பது நிச்சயம். சில சமயங்களில் நம்மில் மிக்க புத்திசாலிகள் என்று கருதப்பட்டவர்கள்கூட மயங்கித் தவறிவிடுவது இயற்கை. ஆனால் அதனால் நல்லபயன் அடைவதில்லை. நானே இரண்டொரு சந்தர்ப்பங்களில் அப்படித்தவறி விட்டிருக்கிறேன். எனக்கு அதனால் சுய அனுபவமிருக்கிறது. இத்தகைய காரியத்தால் அவர்கள் தீமையேயடைவார்களென்பதைச் சீக்கிரத்தில் நாம் காண்போம்.

சுந்தரம்மாள்:—"ஆம் ஆம். அதனால் நன்மை கிடைக்காவிடினும் தீங்கு நேர்வது நிச்சயம்; நீ கூறியது உண்மையே" என்றாள்.

இவர்கள் கூறிய இத்தகைய மொழிகள் முருகப்பன்

மனதில் உறுத்தின. அவன் தன் வரையில், கடலிலமிழ்ந்து போகும் ஒருவனைக் காப்பாற்றுவதாகிய புண்ணியச் செய்கையால் தீங்கு நேரிடும் என்ற விஷயத்தை நம்பவில்லை. அதோடு தனக்கு நேர்ந்த வியாகூலம் தான் பிறருக்குச் செய்த உதவியின் பயன் என்று கருத அவன் மனம் உடன்படவில்லை. ஆயினும் "அத்தகையோர்க்கு உதவி செய்தால் உதவிசெய்கிறவர்களுக்கே அவர்களால் தீங்கு நேரிடும்" என்று ஹாக்கர் முதலிலேயே கூறியபடி குலசேகரனாலேயே தனக்கு மனத்துயர் உண்டானதும், பிறகு அவர்கள் கூறியவிஷயங்களும் அவன் மனதைக் கலக்கிவிட்டன. அவன் மனம் ஒருவித மந்திரக்கட்டுக்குள் சிக்கியது போலாய் விட்டது. தனக்கு அடங்காத ஏதோ ஒரு சக்தி தன் காரியங்களை நடத்துவதுபோல் அவனுக்குத் தோன்றியது. அவனுடைய ஆவலும், என்ன நடக்குமோ அறியவேண்டுமென்ற விருப்பமும் மிக அதிகமாய் விட்டன. தான் அங்கு செல்லவேண்டுமென்று பின்னும் உறுதியாய்த் தீர்மானித்துக்கொண்டான். ஏனெனில் அச்சமயம் அங்கு ஏதோ அதிசயமான சம்பவம் நேரிடுமென்றும் அதனால் தன் எதிர்கால க்ஷேமங்களும் நோக்கங்களும் ஒரு வழியாய்த் தீர்மானிக்கப்படுமென்றும் அவனுக்குள் நம்பிக்கையிருந்தது.

முருகப்பனுடைய தந்தை அன்று மனச்சோர்வில்லாத சாதாரண நிலைமையிலிருந்தான். ஆகையால் முருகப்பன் தன் தந்தையின் அனுமதி பெறாமல் நாம் செல்வது சரியல்ல என்றெண்ணி அவனை நெருங்கி "அப்பா! நான் நாளைக்கு வசந்தமாளிகைக்குச் செல்லக்கருதி யிருக்கிறேன்" என்றான்.

தந்தை அவனை யுற்று நோக்கி "இச்சமயத்தில் நீ

அங்கேன் செல்லக்கருதுகிறாய்? என்ன காரியமாகப்போகிறாய்?'' என்றான்.

முருகப்பன்:—''நாளைக்கு அங்கு பெரிய கேளிக்கை நடக்கப்போகிறது. எல்லோரும் வருவார்கள். நானும் அச்சமயம் அங்கிருக்க விரும்புகிறேன்'' என்றான்.

தந்தை சற்று வெறுப்போடு ''பேஷ்! அங்கு கும்பு கூடும் முட்டாள்களின் தொகையோடு இன்னொரு அடிமுட்டாளைச் சேர்க்கப் போகிறாயோ; சரி,சரி நீயிப்போது எந்த மார்க்கத்தில் செல்லக் கருதுகிறாயோ அதைப்பற்றி அதிஜாக்கிரதையோடு தீர ஆலோசனைசெய். அம்மார்க்கத்தில் செல்வதைவிடக் கடலோரமிருக்கும் பெரியகுன்றின் உச்சியிலேறி அங்கிருந்து தலைகீழாக வீழ்வது மிக்க நலமாகும்'' என்றான்.

முருகப்பன் இதுகாறும் தன் தந்தையிடம் வாதம் செய்வதாவது, அவன் கட்டளைக்குக் காரணம் கேட்பதாவது கிடையா. அவ்வளவு தூரம் நெருங்கிப் பேசுவதில்லை. ஆயினும் இச்சமயம் அவ்வழக்கத்தைக் கடந்து ''ஏனப்பா! தாங்கள் என்னத்திற்காக எனக்கு இம்மாதிரி எச்சரிக்கை செய்கிறீர்களோ எனக்கு விளங்கவில்லை. அதை வெளிப்படையாயறிய நான் ஆவலுடையவனாகவிருக்கிறேன்'' என்றான்.

தந்தை நிமிர்ந்து உட்கார்ந்து:—''நீ வசந்த மாளிகைக்குச் செல்ல விரும்புகிறாய். அதன் சொந்தக்காரராகிய தைரியநாதம் பிள்ளைக்கு இரண்டு பெண்களிருக்கிறார்கள். அவர்கள் மிக்க அழகுடையவர்களென்று எல்லா மூடர்களும் பறை யறைகிறார்கள். உன் போன்ற வயதுடையவர்கள் அத்தகையவர்களைக் கண்டால் மயங்கி விடுவது சுபாவம். நல்ல பாம்பு என்கிற விட நாகம் பார்வைக்குப் பளபளப்பாய்

மிக்க அழகாகவேயிருக்கிறது. அந்தோ! அதன் வாயில் விடமிருக்கிறதென்பதை யறியாது அதற்கு முத்தமளிக்கப்போகும் மனிதன் எத்தகைய புத்தி சாலியாக விருக்கவேண்டும்; அவர்களுடைய இனிய மொழிகள் அதனினும் கொடிய நஞ்சூட்டப்பட்ட அம்புகள் போன்றவை; ஓ அவர்கள் முதலில் அன்பு காட்டினலும் பின்னல் சீக்கிரத்தில் ஆளை அடியோ டழித்து விடுவார்கள். அவர்களிடம் நெருங்காமல் மிக்க ஜாக்கிரதையாய் இரு'' என்ருன்.

தன் தந்தைக்குச் சாதாரணமாய் மாதர்கள் விஷயத் தில் வெறுப்பென்ற விவரம் முருகப்பனுக்கு முன்னமே தெரியும். ஆயினும் தன் தந்தை ஸ்திரீகளைப்பற்றி இவ் வளவு கடுமையாகப் பேசியதை யவன் ஒருபோதும் கேட்டதில்லை. அவன் மிக்க சாந்தமாகவே தன் தந்தையை நோக்கி "அப்பா! தைரியநாதம் பிள்ளையின் புத்திரிகள் எனக்கு மற்ற மாதர்களைப் போன்றவர்களேயன்றி அவர்க ளிடம் எனக்கு விசேஷப்பற்று ஒன்றுமில்லை. மேலும் அவர்கள் ஒரு காரணமேனும் கூருமலே என் நட்பை நிராகரித்து விட்டார்கள்'' என்ருன்.

தந்தை:—"ஓகோ! நீயந்தச் சினேகத்தைப் புதிப்பிக்கச் செல்கிருயோ? ஒரு விட்டிற்பூச்சி ஒரு முறை எரியும் சுடரருகிற்சென்று நற்காலத்தால் காற்றினல் துரத் தப்பட்டு இறகுகள் தீய்ந்துபோகாமல் தப்பிப் பிழைத்து வந்துவிட்டது. அந்த விட்டில் கடைசியில் அத்தீயில் வீழ்ந்து அழிவதற்காக மறுபடி வலிய அதை நெருங்கிச் செல்வதாயின் அதன் புத்தியை யென்னென்று கூறலாம். அந்த விட்டிற் பூச்சியே நீ. ஆயினும் நீ தடுக்க முடியாத வினைவழியே செல் லாதபடி யுன்னைத் தடுக்க நான் வீணுக உன்னேடு

வாதம் புரிவானேன்; வினையைவெல்ல யாரால் முடியும்! புத்தி கன்மானுசாரணி. உன்வினை யுன்னை யிழுக்கிறது; நீயுன் பிரியப்படி செல்" என்றான்.

---

## 17-வது அத்தியாயம்.

மறுநாட்காலை முருகப்பன் வசந்த மாளிகை நோக்கிப் புறப்பட்டான். வழியில் அங்கு, தான் அவசியம் போகவேண்டுமென்று நாகம்மாள் கூறியதையும், தன் தந்தைய தற்கு நேர்விரோதமாக பயங்கரமான எச்சரிக்கை செய்ததையும், ஹாக்கரும் வீட்டுக்காரியஸ்தியும் கூறிய அவசகுனமான மொழிகளையும் சிந்தித்துக்கொண்டே சென்றான். இவையாவும் சேர்ந்து அவன் மனதில் ஒருவித கலக்கத்தை யுண்டாக்கின. அக்கலக்கத்தால் அவன் "வசந்தமாளிகையில் எனக்கு நல் வரவேற்புக் கிடைக்கா தென்று நான் நினைக்கிறேன். பெரும்பாலும் நான் அலட்சியமாக நடத்தப்படலாகும்; ஆனால் நான் அங்கு மிகச் சொற்பகாலமே தங்கியிருப்பேன். நான் அங்கு அறிய வேண்டியது இரண்டிலொரு விஷயமே. புதிதாய் அவர்களிடம் போய்ச் சேர்ந்திருக்கும் அக்குலசேகரன் என்பவனால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்களா, அல்லது புதிதாக ஒரு சினேகன் கிடைக்கவே அந்த மாறுதலால் அவர்கள் இயற்கையாகவே தங்கள் பிரியத்தை மனதார அவனிடம் மாற்றிவிட்டார்களா என்ற இவற்றில் ஒன்றை யுண்மையா யறியவேண்டும். முதலில் கூறியபடி அவர்கள் ஏமாற்றப் பட்டிருந்தால் நான் என் நடக்கை நியாயமானதென்று ருசுப்படுத்துவேன். குலசேகரன் பிறகு தன் வழியைச் சாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டியதே. பின் சொன்னமாதிரி அவர்கள் மனப்பூர்வமாகவே யவ்வாறு

நடந்து கொண்டதாயின் பிறகு, நான் அந்த விடத்திற்கு வந்தனமளித்துவிட்டு அங்கிருந்து கிளம்பி விட வேண்டியதே" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அவன் கடைசி வாக்கியத்தைக் கூறியபோது, அவனுக்குண்டாகும் அகௌரவத்தின் சிந்தனையும், அவன் அப்பெண்களின்மேல் வைத்த அன்பும் சேர்ந்து அவன் மனதைக் கரையச்செய்தபடியால் அவன் கண்களில் நீர் துளித்தது. அவன் கோபத்தோடு துரிதமாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு பாதையே சென்றான்.

அச்சமயம் முன்னுள் இருந்ததுபோலிராமல் வானம் சுத்தமாய் இருந்தது. நல்ல காற்று வீசிக்கொண்டிருந்தது. முன்பு அவன் வசந்த மாளிகையிலிருந்து ஜலபுரத்திற்கு அதே வழியாய் வந்தபோது கடும்புயலிலும் கல் மழையிலும் பட்ட கஷ்டம் அவன் நினைவிற்கு வந்தது. அதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருந்தது. ஆனால் அப்போது அவன் மனோநிலைமை கலக்கமின்றித் தைரியமாயும் நிம்மதியாயும் இருந்தது. இப்போது இருக்கும் தன் மனோநிலைமையை நோக்கி அவன் "ஓ கடவுளே! அன்றிருந்த அதே மனத்திருப்தி யின்றிருக்குமாயின் அன்றிருந்ததைவிட எட்டத்தனை புயற்காற்றும் மழையும் அடித்தாலும் அவற்றின் கஷ்டங்களை நான் சந்தோஷமாய்ப் பொறுத்துக்கொள்வேன்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அவன் அத்தகைய எண்ணங்களோடு பகல் பனிரண்டுமணிக்கு, அவன் முன்பு வசந்தமாளிகையிலிருந்து வந்தபோது வழியில் காற்று மழைக்குத் தங்கிய எல்லப்பன் வீடுபோய்ச்சேர்ந்தான். முன் முறை அவ்வீட்டுக்காரரின் உலோப குணத்தைக் கண்டவனானபடியால் இம்

முறை அவன் அவர்கள் தயவிற்கு எதிர்பார்க்கலாகாதென்று இரண்டு மூன்று வேளைக்குத் தனக்குப் போதுமான ஆகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு சென்றான். ஆகையால் அவன் அங்குத் தங்கவேண்டிய அவசியமேயில்லை. ஆயினும் நாம் அங்கு செல்லாமல் போவது சரியல்லவென்று கருதியே அவ்வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினன்.

அச்சமயம் வீட்டில் பெருங்குழப்பமாயிருந்தது. வீட்டுக்காரனுகிய எல்லப்பன் மிக்க ஆத்திரத்தோடு தன் தங்கையாகிய பாப்பம்மாளையும், வேலைக்காரியாகிய தங்கம்மாளையும் பல கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தான். அவர்கள் கத்திக்கொண்டே பதிலளித்துக்கொண்டிருக்கிறார்கள். கடைசியில் பாப்பம்மாளே வந்து கதவைத் திறந்தாள். அவர்கள் மூவரும் பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருப்பவர்கள்போல் உடையணிந்து கொண்டிருந்தார்கள். பாப்பம்மாள் தன் கரத்தில் வெள்ளிக் கைப்பிடிவைத்த ஒரு குதிரைச்சாட்டி வைத்துக்கொண்டிருந்தாள். அந்த பாப்பம்மாள் முருகப்பனைக் கண்டதும் அவனைப் பற்றிப் புகழ்ந்து கூறிப்பின், "ஏது நீ இச்சமயத்தில் இங்கு வந்தாய்?" என்றாள்.

முருகப்பன்:—"நான் வசந்த மாளிகைக்குச் செல்கிறேன்" என்றான்.

பாப்பம்மாள்:—"அப்படியாயின் நாம் ஒன்றாகச் சந்தோஷமாய்ப் பிரயாணம் செய்யலாம். ஆச்சு போசனம் செய்யவேண்டிய வேளையாய் விட்டது. ஏதோ எங்கள் வீட்டில் கறுப்பு ரொட்டியும் வீட்டிலேயே இறக்கிய பீர்பானமும் திருப்தியாயருந்தலாம். நாம் வயிறு நிறையப் புசித்துவிட்டு யாத்திரை போவதென்னமோ தகாத காரியமே. அதுமட்டுமல்ல; பெரியவிருந்து நடக்கவிருக்கையில் நாம் பசியைத் திருப்தி செய்து

கொண்டு அங்கு செல்வதுச் சரியல்ல. அங்கு பலவித உயர்தர ஆகாரங்கள் ஆயத்தம்செய்து வைக்கப்பட்டிருக்குமென்பதில் சற்றும் சந்தேகமேயில்லை'' என்றாள்.

முருகப்பன் அவளுடைய உலோபத்தன்மையையும் இழிவான நோக்கங்களையும் கண்டு மிக்க வெறுப்படைந்தான். ஆயினும் இப்போது நமது மனோபாவத்தை வெளியிடுவது சரியல்லவென்று கருதி வெறுப்பையும் கோபத்தையும் மறைத்துக்கொண்டு,

"அம்மையே! இச்சமயம் முன் முறைபோல் உங்களுக்குத் தொந்திரையளிக்கலாகாதென்பது என் எண்ணம். ஆகையால் இதோ நம்மனைவர்க்கும் போதுமான ஆகாரமே கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்ட தன் மூட்டையை யவிழ்த்து ஆகாரங்களை மேஜைமேல் வைத்து "வாருங்கள் நாமனைவரும் போஜனம் செய்வோம்'' என்றான்.

பாப்பம்மாள் "ஆ! உன் போன்ற வாலிபனுக்காக நான் பதனிட்டு வைத்திருக்கும் கொழுத்த வாத்துகளில் ஒன்றல்ல இரண்டேனும் சமைக்கச் சந்தோஷமுடையவளாக விருக்கிறேன். உடனே சமைக்க ஆரம்பம் செய்ய வேண்டுமென்பதே என் விருப்பம். ஆனால் நாம் மாலைப் போதுக்குள் வசந்தமாளிகைபோய்ச் சேரவேண்டும். நாம் சமையல் செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்து காலம் தவறியங்கு செல்வது ஒழுங்கல்லவென்பதைப்பற்றியே சிந்திக்கிறேன்'' என்றாள்.

தன் தங்கையின் இழி குணத்தை யறிந்த எல்லப்பன் "தங்காய்! உனக்குத் தொந்திரை வேண்டாமென்றே நமது நண்பர் ஆயத்தமாய் நம்மனைவர்க்கும் போதுமான ஆகாரம் கொண்டு வந்திருக்கிறார். நாம் ஆலசியம் செய்

யாமல் போஜனம் செய்துகொண்டு புறப்படுவோம்'' என்றான்.

அதன்மேல் யாவரும் போஜனம் செய்யத்தொடங்கினார்கள். முருகப்பன் கொண்டு வந்த அத்தகைய உணவுகளையவர்கள் ஒருபோதும் கண்டதில்லை. ஆகையால் எல்லப்பனும் அவன் தங்கையும் திருப்தியாகப் போஜனம் செய்தார்கள். அதன்பிறகு அவர்கள் புறப்படவேண்டியதே. அந்தத் தீவில் பிரயாணம் செய்ய அனேகர்க்குக் குதிரைகள் உண்டு. சிலர்க்கு இல்லாவிடினும் அவசியமில்லை. ஏனெனில் அத்தீவில் சாதாரணமாக ஏராளமான குதிரைகள், குட்டையாய் நீண்ட பிடரிமயிர் உடையவைகள், காடுகளில் சுயேச்சையாய் மேய்ந்து கொண்டிருக்கும். சிலர் ஒவ்வொரு குதிரையின்மேல் தங்கள் பெயரின் குறிப்பெழுத்துக்களைப் பொறித்து வைப்பார்கள். தாங்கள் எங்கேனும் போகும்போது அதைப்பிடித்து அதன்மேல் ஏறிச்செல்வார்கள். மற்றவர்கள் கைக்கு அகப்பட்ட குதிரையைப் பிடித்து அதன்மேல் ஏறிக்கொண்டு தாங்கள் செல்லவேண்டியவிடம் சேர்ந்ததும் அங்கிருந்து அக்குதிரையை விட்டு விடுவார்கள். அது இயற்கை அறிவால் தன் பழைய வாசஸ்தலத்திற்குத் திரும்பிவிடும்.

எல்லப்பன் முதலியோர் முன்னமே தங்களுக்கு வேண்டிய குதிரைகளை ஆயத்தம்செய்து வைத்திருந்தார்கள். பிறகு முருகப்பனுக்கும் ஒரு குதிரை ஆயத்தம் செய்யப்பட்டது. முருகப்பன் சமயோசிதப்படி கிடைத்த சௌகரியத்தை யொப்புக்கொண்டான். அவனுக்களிக்கப்பட்ட குதிரைக்கு அதை யிஷ்டப்படி திருப்பவுதவும் கடிவாளம் தவிர வேறு எவ்வித சாமானுமில்லை. கால் நடையாய்ச் செல்வதற்கு அது மேலல்லவா?

தான் வசந்த மாளிகைக்குச் செல்வதையறிந்ததே

எல்லப்பனும் அவன் தங்கையும் தன்னை மிக்க அன்பாய் உபசரித்த காரணம் பின்னால் முருகப்பனுக்குத் தெரிந்தது. எப்படியெனில் அங்கிருந்து வசந்தமாளிகைக்குச் செல்லும்பாதை ஒழுங்கான பாதையல்ல. வழியில் ஒரு அடவியிருக்கிறது. அந்த அடவியில் ஒழுங்கான பாதை கிடையாது. அப்பாதையில் முன்பின் சென்ற தைரியசாலிகள் வழிகாட்டினால்தான் செல்ல முடியும். அவ்வழியில் துஷ்டமிருகங்களுமுண்டு. ஆகையால் தைரியமும் பலமுமுடைய ஆளின் உதவிவேண்டும். இவர்கள் யாரேனும் ஒரு வழித்துணையை யமர்த்திக்கொண்டே செல்ல வேண்டும். அதற்காகத் தக்க கூலிகொடுத்தாலும் ஆள் அகப்படுவது அப்போது கஷ்டமாகவிருந்தது. ஏனெனில் அச்சமயம் அறுவடை காலமானதால் இத்தகைய வேலைக்கு ஆள் அகப்படுவது கஷ்டம். எல்லா ஆட்களும் இந்த வேலைக்குதவமாட்டார்கள். துணையாக வருபவன் தேகபலமுடையவனாகவும் அக்காட்டுவழி தெரிந்தவனாகவும் இருக்கவேண்டும்.

ஆகையால் எல்லப்பன் முதலியவர்கள் பிரயாணத்திற்கு ஆயத்தமாய்விட்டாலும் துணை யொருவருமில்லையே யென்று மிக்க மனக்கலக்கமடைந்திருந்தார்கள். ஆகையால் முருகப்பன் வந்து, தான் வசந்த மாளிகைக்குச்செல்வதாய்க் கூறியதே அவர்கள் மனம் மிக்க நிம்மதியும் சந்தோஷமுமடைந்தது.

இவர்கள் அக்காட்டு வழியில் சென்று கொண்டேயிருக்கையில் எல்லப்பன் முருகப்பனை நோக்கி மிக்க சிரத்தையோடு "இதோ பார்! இத்தீவின் முதலாளியாகிய தைரியநாதர் இவற்றைக் கவனிக்கிறாரா? இதோ இந்த அடவியில் இருக்கும் இக்கால்வழிப் பாதையையே ஒழுங்குபடுத்தி அகலமாக்கிச் செப்பனிட்டுவிட்டால் இது இரு

புறங்களிலும் செழித்து வளர்ந்த சாலை மரங்களையுடைய முதல்தர இராஜபாட்டையாய்விடும். இதோ இந்த விடத்தில் ஒரு சிறு ஏரியிருக்கிறது. இங்கு சுலபமாய் ஒரு சிறு கிராம முண்டாக்கலாம். அப்போது யாத்திரைக்காரர் தங்கச் சத்திரம் முதலிய வசதிகள் தாமே யேற்படும். நாம் அங்கு சென்றதே சீக்கிரத்தில் இத்தகைய அரிய ஆலோசனைகளையெல்லாம் தைரியநாதம் பிள்ளைக்கு நான் கட்டாயம் கூறப்போகிறேன். தன்புத்திக்குத் தோன்றாத இத்தகைய நன்மை பயக்கும் ஆலோசனைகளைக் கூறிய ஒருவரிடம் அவர் அவசியம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டவராவார்" என்றான்.

அவன் கூறிய யாவும் கேட்ட முருகப்பன் கடைசியில் அவனை நோக்கி "நீ முடிவில் கூறிய விஷயத்தைப்பற்றி அவ்வளவு நம்பிக்கை கொண்டு விடலாகாது. ஏனெனில் தைரியநாதம் பிள்ளை எல்லாக் காரியங்களையும் தம் விருப்பப்படியே செய்பவர். உன் வார்த்தைகள் அவர் செவியிலேறா; அவர் தாம் பிறந்த நாட்டின் ஆசாரத்தையே பின்பற்றி நிற்பவர்" என்றான்.

எல்லப்பன்:—என்ன நீ கூறுவது? அவர்கள் வடநாட்டில் ஜனங்கள் நெருங்கிய அடவிகளிலேயே காட்டுமிருகங்களோடு கூடவே வசித்துக்கொண்டிருப்பார்கள். இந்தத்தீவையும் அம்மாதிரியே செய்துவிடமுடியுமா? நான் பல தலைமுறைகளாக இங்கு வசிக்கும் பூர்வீக குடும்பத்தைச் சேர்ந்தவன். நாம் வசிக்கும் தீவில் யாவர்க்கும் சௌகரியங்களை யுண்டாக்கத்தக்க சில ஏற்பாடுகளைச்செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறினால் படித்தவர்களுடைய ஆலோசனையை யவன் எப்படி நிராகரிப்பான் பார்ப்போம். என்ன இவ்

வூரிலிருக்கும் அறிவாளிகளின் நல்ல ஆலோசனையை யேற்றுக்கொள்ள மாட்டானு?" என்றான்.

அதற்குள் முருகப்பன்:—அய்யா! நீர் இவ்விஷயத்தில் உமது அபிப்பிராயத்தை யதிகமாய் உறுதிப்படுத்தி விட வேண்டாம். அவசரப்படாமல் நான் கூறுவதைக் கேளும். தைரியநாதம் பிள்ளை தாம் பிறந்ததுமுதல் இந்த விநாடி வரையில் தமக்கு மேற்பட்ட பெரிய மனிதனைக் கண்டதில்லை. பிறந்தது முதல் கடிவா ளங்காணுத ஒரு கிழக்குதிரையைக் கடிவாளத்தா லடக்குவது நடக்கிற காரியமல்ல. அவர் முதலாவது ஒருவர் கூறுவதைப் பொறுமையாய்க் கேட்கும் சுபாவமுடையவரல்ல. நீர் உமது விவகாரத்தை விளங்கும்படியவருக்குக் கூறுமுன்பே கோபம் வந்துவிடும்" என்றான்.

பாப்பம்மாள் தன் தமையனைநோக்கி "நீ கூறுவது உனது இயற்கையான புத்தியுள்ள மொழிகளே! ஆயினும் முட்டாள்களுக்குப் புத்தி கூறுவதில் கெடுதி நேரிடுமே யன்றி நன்மை யொருபோதுமுண்டாகாது. ஏனெனில் தூக்கணன் குருவி குரங்குக்குப் புத்திகூறிய கதையாக முடியும்" என்றாள்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக்கொண்டே செல் கையில் ஒரு சிறு ஆற்றைக்கடக்க நேர்ந்தது. இவர்கள் ஆற்றில் இறங்கிச் செல்லும்போது எல்லப்பனைச் சுமந்து சென்ற காட்டுக் குதிரை கோபத்தோடு ஒரு உதறு உதறி அவனை ஆற்றில் தள்ளிவிட்டுக் காட்டை நோக்கி யோடி விட்டது. இக்காட்சியைக் கண்டதே கூடச்சென்ற அனை வரும் கலகலவென்று நகைத்து விட்டார்கள். முருகப்பன் மட்டும் தனக்கு வந்த நகைப்பை யடக்கிக் கொண்டு, துரித மாகச் சென்று எல்லப்பனை ஆற்றினின்றும் தூக்கி

வெளியில்விட்டான். எல்லப்பன் தன் நனைந்த உடைகளை யுதறிக்கொண்டபின் கோபத்தோடு தன் தங்கையை நோக்கி "நான் கட்டாயம் இத்தீவிலுள்ள துஷ்டக் குதிரைகளையெல்லாம் அடியோடு ஒழித்துத் தொலைத்து விடுகிறேன். இவற்றிற்குப்பதிலாகச் சாந்தமான வெளிநாட்டுக்குதிரைகளைத் தருவிப்பேன்" என்றான்.

பாப்பம்:—"நீ முன்னே உன் உடைகளிலுள்ள ஜலத்தைப் பிழிந்து ஒழித்துவிடு. அதன் பிறகு இத்தீவிலுள்ள குதிரைகளை யொழிக்க வழி பார்க்கலாம்" என்றாள்.

இதற்கிடையில் முருகப்பன் ஆற்றோரத்தில் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்த குதிரைகளில் ஒன்றைப் பிடித்து நாரினால் திரித்த ஒரு கடிவாளம்போட்டு அதைப் பிடித்துவந்து எல்லப்பனைய தன்மேல் ஏறிக்கொள்ளச் செய்தான். அக்குதிரையிடமிருந்த வேகத்தால் எல்லப்பனுடைய பெருமையும் கோபமும் தணிந்துவிட்டன. அவன் ஐந்து மைல் தூரம் செல்லுமட்டும் ஒருவார்த்தைகூட பேசவில்லை. இதற்கிடையில் பாப்பம்மாள் ஓடிவிட்ட குதிரை கொண்டுபோன கடிவாளத்தைப்பற்றிப் பிரலாபிக்கத் தொடங்கினாள்.

"அய்யோ தெய்வமே! அக்கடிவாளத்தை நான் ஒரு வருடப் பிறப்புப் பண்டிகைக்குச் சென்றபோது அங்கு கியாபகார்த்தமாக வாங்கினேன். அதை வாங்கிப் பதினெட்டு வயதாயிற்றே. இத்தனை நாள் கழித்து இப்பாழும் குதிரையால் அதைத் தாரை வார்க்க நேர்ந்ததே. நம் வீட்டுப் பொருள்கள் இப்படி யழிவதென்றால் யார் மனந்தான் தாளும்?—" என்றிவ்வாறு பேசிக்கொண்டே வந்தாள்.

முருகப்பனுக்கு வசந்தமாளிகை நெருங்குகிறதென்று தெரியும். ஆகையால் அவன் பாப்பம்மாளுடைய மொழி

களைக் கவனிக்கவாவது அவற்றிற்கு மறு மொழி பகரவாவது கருதாமல், "நாம் வசந்த மாளிகையை யடைந்தால் அங்குள்ளவர்கள் நம்மை யெப்படி வரவேற்பார்கள்; நாம் மிக்க அன்புகாட்டி நேசித்த இரண்டு கன்னிகைகளும் இப்போது நம்மிடம் எப்படி நடந்து கொள்வார்கள்?" என்பன போன்ற சிந்தனைகளிலேயே யிருந்தான்.

இதுகாறும் இவர்கள் ஆபாசமான சதுப்பு நிலங்களின் வழியாய்ச் சென்று கொண்டிருந்தார்கள். இப்போது உப்பங்கழியோரத்தில் இருபுறங்களிலும் செழிப்பான பயிர்களையுடைய பூமியில் பிரவேசித்தார்கள். இத்தகைய பூமியின் மத்தியில்தான் வசந்த மாளிகையிருக்கிறது. அதன் வடக்கிலும் கிழக்கிலும் புயற்காற்றுகளைத் தடுக்கத் தக்க குன்றுகள் வரிசையாகவிருக்கின்றன. அக்கிராமம் முழுமையும் ஏறக்குறைய எல்லா வீடுகளிலுமிருந்து தாராளமாகப் புகை வெளிவந்து கொண்டிருந்தது. இதனல் அங்கு நடக்கும் கேளிக்கையும் விருந்தும் இத்தீவின் முதலாளி வீட்டில் மட்டும் நடப்பதல்ல. அந்தக் கிராமம் முழுமையுமே நடக்கிறதென்று தெரிந்தது.

அக்காட்சியைக் கண்ட பாப்பம்மாள் "ஓகோ! இந்த ஊர் முழுமையும் எரிவதுபோலன்றோ தெரிகிறது. சமையல் மணம் காததூரம் வீசும்போல் காண்கிறது. ஓகோ! பசியோடுவரும் விருந்தாளிகளுக்குத் தட்சணம் திருப்தியான உணவு கிடைக்குமென்பதில் சந்தேகமேயில்லை" என்ருள்.

முருகப்பனுக்கு இச்சம்பாஷணை மிக்க இழிவாகத் தோன்றியது. அதோடு அவன் எண்ணம் முழுமையும் வேறு வழியான சிந்தனையில், மிக்க கலவரமான நிலையிலிருந்தது. முதலாவது தன்னை மிக்க அன்பார்ந்த சினேக

னுக மதித்து முதன்மையான விருந்தாளியாக நடத்தி வந்த அந்தக் குடும்பத்தார் இச்சமயம் தன்னை யெவ்வாறு வரவேற்பார்களென்பது ஒரு பெரிய கலக்கம். இரண்டாவது "நம்மிடம் அன்புகாட்டி நடந்து கொண்டிருந்த அப் பெண்கள் இப்போது எப்படி நடந்து கொள்வார்களோ, ஒரு சமயம் அவர்கள் குலசேகரன் காதலில் ஈடுபட்டு விட்டார்களோ" என்று இவ்வாறு மிக்க கலவரமான மனதோடு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

மாதர் மயக்கில் சிக்கி அல்லற்படும் மூடர்களுக்கு எங்கேனும் மன நிம்மதியுண்டோ? மணம் முடியாத வாலிப கன்னிகையை அன்னிய வாலிப ஆடவர்களிடம் தாராளமாகப் பேசலாம் புழங்கலாம் என்ற மூடத்தனமான அறிவீன ஆசாரத்தால் நேரிடும் கொடிய தீங்குகளுக்கு ஓர் அளவில்லை. இந்த மீனுள், புனிதவதி என்னும் கன்னிகைகளின் சம்பந்தமாகவே போகப்போக இக்கதையால் அந்த ஆசாரத்தின் கெடுதிகள் நன்கு விளங்கும். நமது பெண்களையும் அந்த ஆசாரத்தில் பழக்கவேண்டும் என்னும் புத்திசாலிகள் இதைக் கவனிக்க விரும்புகிறோம்.

## 18-வது அத்தியாயம்.

முருகப்பன் முதலியவர்கள் கிராமத்திற்குள் சென்று வசந்த மாளிகையை நெருங்கியபோது அவர்கள் கண்ட காட்சி மிக்க அபூர்வமானது. நாற்புறங்களிலிருந்து விருந்தினர் சிறு சிறு கூட்டங்களாக வந்துகொண்டிருந்தார்கள். சிலர் கால் நடையாகவும், சிலர் குதிரைகள் மேலும், சிலர் கழிகளின் வழியாகப் படகுகளிலும் அங்கு வந்து கொண்டிருந்தார்கள். அவ்வூரில் அறிமுகமானவர்களையாவது சினேகர்களையாவது உடையவர்கள் அவர்

கள் வீடுகளுக்குச்சென்று நல்வரவேற்கப்பட்டார்கள். எல்லா வீடுகளுமே ஏறக்குறைய விருந்து மண்டபங்கள் போல் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

ஒவ்வொரு கூட்டமும் அங்கு வந்து சேர்ந்ததும் தங்கள் குதிரைகளினின்றும் இறங்கி அவற்றைத் தம்மிஷ்டப்படி செல்லுமாறு விட்டு விட்டார்கள். தீவின் முதலாளி வீட்டில் பெரிய அமக்களமாகவிருந்தது. அங்கு வருகிறவர்களை நல்வரவேற்கும் குறியாக வாயிற்படி யருகில் இருந்த பக்க அறையில் இனிய வாத்தியம் முழங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு கூட்டமும் உள் நுழையும் போது வரவேற்கப்படும் சத்தம் நெடுந்தூரம் கேட்டது. முதல் வாயிற்படியினருகிலிருந்த கூட்டத்தில் தைரியநாதம் பிள்ளை இருந்துகொண்டு வருகிற விருந்தினரை வரவேற்றுக்கொண் டிருந்தார். அம்மாளிகைக்குள் சமையல் நடக்குமிடத்தில் உண்டாகும் சந்தடியும் சமையற்காரரின் தலைவனுடைய அதிகாரத்தொனியும் ஒருபக்கம் மிக்க சந்தடியையுண்டாக்கிக் கொண்டிருந்தன.

பாப்பம்மாள் இவையாவுமறிந்ததே, அவள் மனம் வேறொன்றிலும் செல்லவில்லை. அவளுடைய இயற்கைக் குணப்படி அங்கு நடக்கும் அபரிமிதமான செலவைப்பற்றியே அவள் மனம் சிந்திக்கத்தொடங்கியது. அவள் "அய்யோ! ஏககாலத்தில் செலவழிக்கும் இவ்வளவு ஆகாரம், அப்பா எத்தனை நாளைக்கு ஒரு குடும்பத்திற்கு உதவும். இப்படிக்கூட அபரிமிதமான செலவு யாரேனும் செய்வார்களோ! எத்தனை வான் கோழிகள்! எவ்வளவு ஆடுகள், மான்கள்! அடடா........" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.

இவர்கள் அம்மாளிகையின் முதல் வாயற்படியைக் கடந்து கடைசியில் தைரியநாதர் தமது விருந்தி

னரை வரவேற்க நின்றுகொண்டிருக்கும் வாயற்படியை நெருங்கினுர்கள். அங்கு சென்றதே பாப்பம்மாள் தன் உடைகளையெல்லாம் ஒழுங்கு படுத்திக் கொண்டாள். முருகப்பனுடைய மனதில் அச்சமயம் இருந்த கலக்கம் சொல்லமுடியாது. அந்தோ! மாதர்மேல் மயக்கங்கொண்ட ஒருவனுடைய மனம் படும் வேதனை சொல்லொணுது. அத்தகையோர் எவ்வளவு இன்பம் அதில் உண்டென்று கருதுகிருர்களோ அவ்வளவும் துன்பத்தையே யுண்டாக்கும்.

எல்லப்பன் முதலியவர்கள் மாளிகைக்குள் நுழைந்து சென்ருர்கள். தைரியநாதம்பிள்ளை அவர்களைக் கண்டதும் அவர் முகத்தில் ஒருவித வெறுப்பான குறி தோன்றியது. எல்லப்பன் அருகில் வந்ததும் தைரியநாதம்பிள்ளை "எல்லப் பப்பிள்ளை! உனக்கு நல்வரவு; வசந்தமாளிகைக்குக் கடற் காற்று உன்னைக்கொண்டு வந்துவிட்டது. இந்தமாது உனது தங்கைபோலும்; பாப்பம்மாள்! உனக்கு வந்தனம்" என்ருர். அதன் பிறகு முருகப்பனைப் பார்த்தார். அவனை யுற்றுநோக்கி, ஏதோ மனக்கலக்கத்தை யடக்கிக்கொண்டே "உனக்கும் நல்வரவே" என்ருர்.

முரு:—"நான் அப்படி நினைத்திராவிட்டால் இங்கு வந்திரேன். அவசியமாயின் திரும்பிப்போய்விடக் காலம் மிஞ்சிவிடவில்லை" என்ருன்.

**தைரியநாதர்**:—வாலிபனே! இந்த வீட்டிற்கு வந்தபின் எந்த மனிதனும் எனக்குச் சந்தோஷ மூட்டாமல் திரும்பிச்செல்ல முடியாது. இது மற்ற எல்லாரையும்விட உனக்கு நன்ருகத் தெரியும்; உன் தவறுதல்களால் இச்சமயத்தில் இங்கு வந்திருக்கும் விருந்தினருக்குக் கலக்கமுண்டாகும்படி நடந்துகொள்ளாதே. நடவுங்கள் நடவுங்கள்; உள்ளே சென்று

என் புத்திரிகள் உங்களுக்கு என்ன சந்தோஷம் அமைத்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்" என்றார்.

தைரியநாதர் கூறியமாதிரியால் முருகப்பன் அவர் பிரத்தியேகமாய்த் தனக்கு உபசாரமாக ஏதேனும் கூறினாரென்று கருத இடமில்லை. அதோடு அவர் தன்னை நீக்கி மற்றவர்களை மட்டுமே அன்புடன் உபசரித்தார் என்று கருதுவதற்கும் வழியில்லை. அவ்வளவு தந்திரமாய்ப் பொதுவாய்த் தன் வீட்டிற்கு வந்த எல்லாருக்கும் அவர் நல்வரவு கூறுபவர் போலவே கூறினார்.

அவர் சுட்டிக்காட்டிய பக்கமே யிவர்கள் சென்றார்கள். அப்பக்கம் இரண்டு பெரிய கதவுகள் இருந்தன. உள்ளே பிரமாண்டமான கூடம் இருந்தது. அது இப்போது விருந்து மண்டபமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சாதாரணமாக அத்தீவிலுள்ள பிரதான வீட்டுக்காரரை வருமே திகைத்தப்பி அல்லது அனாதரவாக வரும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய உதவிசெய்வது வழக்கம். அந்தத் தீவின் கரையில் அடிக்கடி கப்பற்சேதம் நேர்வதுண்டு. தைரியநாதம் பிள்ளை தீவின் தலைவரானபடியால் கப்பற்சேதம் நேர்ந்தால் யாரும் போய்க் கொள்ளையடிக்கலாகாதென்றும், அச்சேதத்தினின்றும் உயிர் தப்பியவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும் மிக்க கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார்.

ஆயினும் விருந்து மண்டபத்திலிருந்த நாற்காலிகள் மேஜைகள் சுவர்களில் தைக்கப்பட்டிருந்த பலகைகள் முதலியயாவும் ஒருகாலத்தில் கப்பலிலிருந்தவைகளே. கப்பற்சேதமாகிக் கரையில் எறியப்பட்டுக் கிடக்கும் பொருள்களுக்கு யாரும் வாரிசு வராதபோது சட்டப்படி அத்தீவின் சொந்தக்காரருக்கே அவை உரித்தானவையா

கும். அந்த விருந்துமண்டபம் இன்னும் பலவித விலையுயர்ந்த சாமான்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விருந்தினர் கூட்டம் கூட்டமாக வந்து குழுமியிருந்தார்கள். அவர்களில் அனேகம் குடும்பங்கள் முருகப்பனுக்கு அறிமுகமானவைகளே. அவர்களில் வாலிபர்களாகவுள்ளோர் மிக்க குதூகலத்தோடு அவனை வரவேற்று "ஹா! முருகப்பன் இத்தனை நாட்களாக ஏன் நீ இந்தத் திக்கே திரும்பவில்லை? எங்கே சென்றிருந்தாய்? பழைய நண்பர்களையெல்லாம் மறந்து விட்டாயோ?" என்று வினவினர்கள்.

முருகப்பன் தானே அங்கு வராமல் நின்று விட்டான் என்று அவர்கள் எண்ணிக்கொண்டார்கள். முருகப்பன் தன் தந்தையின் தேக நிலைமையே யதற்குக் காரணம் என்று அவர்களுக்குச் சமாதானம் கூறினன். அவன் மனதில் ஒரு விஷயத்தில் நிம்மதி யுண்டாயிற்று. அதாவது அந்த ஒரு வீட்டுக்காரர் தன்னை நிராகரித்திருந்தாலும் அப்பிரதேசத்திலுள்ள யாவரும் தன்மேல் அன்புடையவர்களாகவேயிருக்கிறர்கள். தைரியநாதர் குடும்பத்தார் தன்னை நிராகரித்ததன் காரணம் அவர்கள் வரையில் சம்பந்தப்பட்ட இரகசியமாகவே யிருக்கவேண்டும் என்று அவன் மனதிற்குப் புலப்பட்டது.

முருகப்பன் தனக்கறிமுகமான ஒவ்வொரு குடும்பத்தாரையும் பார்த்துக்கொண்டே சென்றபோது தன் கூட வந்த எல்லப்பன் முதலியவர்களை நழுவவிட்டான். கடைசியில் அவன் அந்த விசாலமான விருந்து மண்டபத்தின் ஓர் பக்கம் இருந்த சிறு கதவை நோக்கிச்சென்றுன். அந்த அறை தான் மீனுள் புனிதம் இருவரும் தங்களுக்கென்று பிரத்யேகமாய் விசேஷ சிரத்தையோடு அலங்காரம்செய்து கொண்டது. அந்த அறையை அலங்காரம் செய்யும்போது முருகப்பன் கூடவிருந்து விசேஷ உதவி செய்திருக்

கிருன். முன்பு அவன் அங்கு தன் தந்தையோடு வசித்திருந்தபோது அந்த அறையின் சொந்தக்காரன்போல் நினைத்து எந்த வேளையிலும் ஒருவர் அனுமதியின்றி உள்ளே சென்று கொண்டிருந்தான். இப்போது காலம் அடியோடு மாறிவிட்டிருந்தது.

ஆகையால் முருகப்பன் அந்த அறையின் முன் நின்று கதவைத் தட்டித் தாழ்ப்பாளைத் திறக்கும் கைப்பிடியைப்பற்றிக்கொண்டு நின்ருன். சற்றுநேரங்கழித்து "சரி உள்ளேவா" என்று புனிதவதி கூறும் சத்தம்கேட்டபின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்ருன்.

அந்த அறை அந்த விசேஷ சமயத்தை யனுசரித்து மிக்க அதிகமாய் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. முருகப்பனுக்கு அவற்றின்மேல் நோக்கம் செல்லவில்லை. அவன் பார்வை முன்னே அங்கிருந்த ஆட்களின்மேல் சென்றது. அவன் உள்ளே சென்ற சமயம் மீனுள் புனிதம் என்ற சகோதரிகளிருவரும் புதிதாகக் கிடைத்த தங்கள் சினேகனுகிய குலசேகரனிடம் மிக்க அக்கரையோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களருகில் ஒரு வயோதிகனும் உட்கார்ந்திருந்தான். அவன் மிக்க வயது சென்றவனுயினும் மரியாதைக் குரியவனுகக் காணப்பட்டான். அவன் தேகம் காலத்தால் தளர்ச்சியடைந்து விட்டிருந்தாலும் அவன் புத்தியில் பிரகாசம் மங்கவில்லையென்பது அவன் கண்களிலிருந்த பிரகாசத்தால் நன்ருகத் தெரிந்தது.

சகோதரிகளிருவரும் முருகப்பனைக் கண்டதே அவர்கள் மனதில் உண்டான உணர்ச்சிகளால் பலவிதக் குழப்பங்கள் கிளம்பின. ஆயினும் மூத்தவளாகிய மீனுள் மட்டும் சீக்கிரத்தில் தன் மனக்கலக்கமனைத்தும் உள்ளடக்கிக்கொண்டு தைரியத்தோடு அமைதியுடையவள் போல் நின்

ருள். இளையவளுக்குச் சீக்கிரத்தில் தன் கலக்கத்தை யடக்க முடியவில்லை. இருவரும் ஒருவாறு குழறிக் கொண்டே சாதாரணமாக அறிமுகமுடைய ஒருவனிடம் உபசாரம் காட்டுவது போல் பேசினார்கள். அவர்கள் உபசரணை யேறக்குறைய அவர்கள் தந்தை செய்த உப சரணையைப் போன்றே மரத்திலும் படாமல் மாங்காயிலும் படாமல் இருப்பதுபோல் தோன்றியது.

அச்சமயம் முருகப்பன் மனதில் மீனாக்ஷி யென்ற மூத்த சகோதரிக்குத் தன்னிடமிருந்த அன்பு அடியோடு போய்விட்டதென்பதும், ஆனால் இளையவளுடைய அன் பைமறுபடிதான் பெறலாகுமென்பதும் புலப்பட்டன. மனிதன் சுபாவம் இத்தகைய நிலையற்றதாக விருக்கிறது. இவன் அங்கு வசித்திருந்தபோது இரண்டு சகோதரிகளி லும் உயர்வுதாழ்வு அறியாத நிலைமையிலிருந்தான். இப் போது மூத்தவளுக்குத் தன்மேலிருந்த அன்பு போய்விட் டதென்று தெரிந்ததே அவள்மேல் தனக்கு அதிக அன் பிருப்பதாக அவன் மனதிற்குத் தோன்றியது. மனித சுபாவமே கையிலிருக்கும் பொருளில் அவாகுறைவும், எட்டாத பொருள் மிக்கக் குறைந்ததாயினும் அதனிடம் ஆவல் அதிகமிருப்பதும் அனுபவம்.

முருகப்பன் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக் கையில் குலசேகரன் தன் அருகில் வருவதைக்கண்டான். குலசேகரன் அக்கன்னிகைகள் முருகப்பனிடம் பேசி முடி யட்டும் என்பதற்காகவே அதுகாறும் காத்துக்கொண் டிருந்தான். அதன் பிறகு தன் உயிரைக்காப்பாற்றிய உபகாரிக்கு நல்வரவு கூறி வந்தனமளிப்பதற்காக அருகில் வந்தான். அவன் சற்றும் களங்கமற்ற மனமுடையவன் போலும் அன்போடு தனக்கு உதவி செய்த நண்பனைச் சந்திக்கவெண்ணியவன் போலும் காணப்பட்டான். அவன்

வந்து சேர்ந்தது முதலே அக்குடும்பத்தினர்க்குத் தன் மேலிருந்த அன்பு அழிந்ததெனினும் முருகப்பன் சந்தோஷமாகவே அவன் வந்தனத்தை யேற்றுக்கொண்டு "ஹா! க்ஷேமந்தானே! உன் காலம் சந்தோஷமாகவே கழிகிறதென்று நம்புகிறேன்?" என்று மனப்பூர்வமாகக் கேட்பவன்போன்றே கேட்டான்.

குலசேகரன் அவன் மொழிகளுக்குப் பதிலளிக்கவே முயன்றான். ஆனால் அதற்குள் அவனருகிலிருந்த நாம் முன்பு கூறிய வயோதிகன் முன்னேக்கி வந்து முருகப்பனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டு அவன் நெற்றியில் முத்தமளித்து "என்ன? வசந்தமாளிகையில் காலம் எப்படி கழிகிறதென்று நீயா கேட்டாய்? எப்படி யிங்கு காலம் கழியும்? அழகும், சந்தோஷமும் அது பறக்க எவ்வளவு உதவி செய்கின்றனவோ அவ்வளவு ஆனந்தமாய் இங்கு காலம் கழிகிறது" என்றான். முருகப்பன் அம்முதியோனுக்குத் தக்க விதமாகப் பதிலளித்தான்.

குலசேகரனைக் கண்டது முருகப்பன் மனதிற்குக் கலக்கமே. முதலில் க்ஷேமசமாசாரத்தை விசாரித்தபின் இன்னது பேசுவதென்பதில் அவனுக்குக் கலக்கமே. அதனால் அச்சமையத்தில் இந்த வயோதிகர் சம்பாஷணையினிடையில் நுழைந்தது அவனுக்கு மிக்க நிம்மதியாயிருந்தது. அந்த வயோதிகர் பெயர் பைரவி கிருஷ்ணப்பன். அவர் சங்கீதத்தில் அப்பிரதேசங்களில் பிரசித்தி பெற்றவர். ஆதலால் முருகப்பன் அவரோடு வேடிக்கையாக ஆனல் மரியாதையாகவே சம்பாஷணையை வளர்த்திக் கொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்குள் இவர்கள் சம்பாஷணை அப்போது நடக்கப்போகும் நடன சம்பந்தமான சங்கீத விஷயத்தைப்பற்றித் தொடங்கலாயிற்று. அச்சம்பாஷணையில்

சகோதரிகளும் குலசேகரனும் கலந்து கொண்டார்கள். கடைசியில் கிருஷ்ணப்பன் "ஆ-ஆ! அந்தச் சங்கீதப்படி நடனம் செய்வதாயின் நமது முருகப்பன் ஒரு பக்கம் இருந்தால் தான் அது இரமிக்கும். குலசேகரனுக்கு அது புதிதே; இது நமது முருகப்பனைக்கூடச் சேர்த்துக் கொள்கிறபடியால் எனக்கு விருப்பமே, என்ன சொல்லுகிறாய் குழந்தாய் மீனாட்சி? புனிதம்?" என்றார்.

மீனாள்:—"முருகப்பா கடைசியில் வந்தபடியால் இச்சமயம் எங்கள் ஜதையில்சேர அனுகூலமில்லையே; இது எங்கள் துரதிஷ்டமே ஆயினும் தடுக்கமுடியாது" என்றாள்.

இதைக்கேட்ட பைரவி கிருஷ்ணப்பன் முகம் சிவந்தது. அவர் சற்று ஆத்திரமடைந்து "என்ன என்ன! கடைசியிலா? பழைய பாட்டே நேர்த்தியானது; எப்போதும் பழைய சினேகரே நிச்சயமானவர்கள். குழந்தைகாள்! நான் கிழவன், கூறும் மொழிகளை நம்புங்கள். நமது குலசேகரனுடைய சாரீரம் நேர்த்தியானதே. ஆயினும் முருகப்பன் இதே பாட்டில் உங்களோடு பழகியவன். ஆகையால் முதல் நடனத்திற்காவது அவனே இவ்விஷயத்தில் உங்களுக்குச் சரியான ஜதை. இதோ நமது புனிதமும் என் அபிப்பிராயமே யுடையவளாகவிருக்கிறாளென்று எனக்கு அவள் முகத்தால் புலப்படுகிறது" என்றார். புனிதவதி அருவருப்பால் முகம் சிவந்து பெரியோரே நீர் கூறுவது இச்சந்தர்ப்பத்தில் முழுதும் தவறான அபிப்பிராயம்" என்று மொழிந்தாள்.

அதன்மேல் அம்முதியோன் அச்சகோதரிகளின் முகத்தை யுற்றுநோக்கி "அடடா! இதென்ன இப்போது புயற்காற்றடிப்பது போன்ற மனஸ்தாபமாக வல்லவோ இருக்கிறது. இது குழப்பத்தின் அறிகுறியாக வல்லவோ

தோன்றுகிறது. குற்றம் எங்கே யிருக்கிறது? என்மேல் தான் என்று கருதுகிறேன். ஏனெனில் இத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றத்தை முதியோர் மேல் சுமத்துவதே வழக்கம்'' என்றார்.

மீனாட்சி:—“ஐயா! குற்றம் உம்மேலில்லை'' என்று கூறிக்கொண்டே தன் தங்கையின் கரத்தைத் தன் கரத்தில் கோத்துக்கொண்டாள்.

அச்சமயம் முருகப்பன் மனம் எவ்வாறிருக்கு மென்பதை வாசிப்போரே சிந்திக்கலாகும். நம் நாட்டாரா யிருந்தால் நம் ஆசாரப்படி அதன் பிறகு ஒருவினாடியேனும் அங்கு தங்கார்கள். அத்தகைய கன்னிகைகள், அவர்கள் அரம்பை ஊர்வசியாகவே யிருந்தாலும் அவர்களைச் சட்டை செய்யாமல் உடனே திரும்பி விடுவார்கள். அந்தோ உலக போகத்தை யனுபவிப்பதே மானிட ஜன்மம் எடுத்ததன் பயனென்றும், மாதரே பெண் தெய்வங்களென்றும் மதிப்போர், எப்படியேனும் அப்பெண்களுக்குச் சமாதானம்கூறி அவர் காலில் விழுந்தேனும் அவர்களுக்குத் தம்மேல் தயையுண்டாகும்படிசெய்து கொள்வது இயற்கையே. ஆகையால் முருகப்பன் தன் மனக்கலக்கமனைத்தும் ஒருவாறு அடக்கிக்கொண்டு சாதாரணமாய்க் கூறுபவன் போலவே,

“மீனாட்சி! அப்படியாயின் புதிதாய் வந்தவனே குற்றத்தைக்கொண்டு வந்தானென்று அஞ்சுகிறேன்'' என்றான்.

மீனாட்சி:—“இப்போது யாரும் அக்கோபத்தைப் பாராட்டாதவரையில் குற்றம் யாரால் கொண்டு வரப்படினும் அவசியமில்லை'' என்றாள்.

முரு:—அடடா! மீனாட்சி! நீயா இப்படி கூறுகிறாய்? நீ கூட புனிதம்! எனக்குச் சமாதானம் கூற இட

மளிக்காமலே நீங்கள் என்னைப்பற்றி ஒரு கடுமை யான தீர்மானம் செய்துவிடலாகுமோ?" என்றான்.

புனிதவதி:—"நமக்கு மேல் எதையும் உணரவல்லவர்கள் தங்கள் பிரியத்தை யெங்களுக்கு வெளியிட்டார்கள். நாங்கள் அவ்வாறு நடக்கவேண்டியவர்களே" என்று தாழ்ந்த குரலில் கூறித் தன் தமக்கையை நோக்கி, "அக்கா! நாம் இங்கு நெடுநேரம் இருந்து விட்டோம். வேறிடத்திற்குச் செல்ல வேண்டுமல்லவா - வா போவோம். இத்தகைய சமயத்தில் இதற்காக முரு கப்பர் நம்மை மன்னிப்பார்" என்றாள்.

உடனே இரண்டு கன்னிகைகளும் கைகோத்தபடி அந்த விடத்தைவிட்டுப் போய்விட்டார்கள். கிருஷ்ணப்ப ணுகிய முதியோன் அவர்களைப் போகாதபடி தடுக்கப் பன் முறை அவனாலானவரை முயன்றும் அப்பெண்கள் மதி யாமற் சென்றனர்.

---

## 19-வது அத்தியாயம்.

அப்பெண்கள் சென்றதே பைரவி கிருஷ்ணப்பன் ஒருவிதமான வெறுப்போடு "சே சே! பெண்கள் எக்காலத்திலும் இம்மாதிரியே" என்று கூறி அதற்குமேற் கோளாக ஒரு கவியும் கூறிவிட்டுக் குலசேகரனை நோக்கி, "காப்டென் குலசேகரன்! இப்பெண்களின் மனதில் இத்தகைய சலனபுத்தியை யுண்டாக்கியது என்ன காரண மென்று உனக்குத் தெரியுமோ?" என்று வினவினான்.

குலசேகரன் "காற்று ஏன் திசைமாறி யடிக்கிறதென் பதையும், பெண்களின் மனம் ஏன் மாறுகிறதென்பதையும் பற்றி விசாரிக்கத் தொடங்குகிறவன் பைத்தியக்காரனே ஆகிவிடுவான். அவ்வழியில் காலத்தைக் கழிப்பது

வீணையாகும். நான் முருகப்பனுக விருந்தால் பெருமை யுடைய அக்கன்னிகைகளை யவ்விஷயத்தைப்பற்றி ஒரு கேள்விகூடக் கேட்கமாட்டேன்'' என்ருன்.

இதை வாசிப்போர் இக்குலசேகரன் கூறிய இவ்விஷ யத்தை மனதில் வைக்க வேண்டுகிறோம். இவன் கூறியது சாதாரணமானதும் பொதுவானதும் பெருந்தன்மையும் புத்திசாலித் தனமுடையதுமான விடையாகவே புலப்படு கிறது. ஆனல் முருகப்பன் விஷயத்தில் அப்பெண்களுக்கு- ஏன் அக்குடும்பத்திற்கே யுண்டான அருவருப்பு இவன் அங்கு வந்தது முதலே தொடங்கி யிருக்கிறது? குலசேக ரன் மந்தபுத்தியுடையவனல்ல; அவனுக்கு இந்த உண்மை தெரிந்தே யிருக்கவேண்டும். அப்படி யிருந்தும் அவன் தன் உயிரைக் காப்பாற்றிய நண்பன் விஷயத்தில் இத்த கைய அபிப்பிராயத்தைக் கூறுகிருன். இது எவ்வளவு வரையில் மனப்பூர்வமாகக் கூறப்பட்டதென்பதும் எவ் வளவு வரையில் சுயநலபுத்தி இதில் இருக்கிறதென்பதும் போகப்போகத்தானே வெளிவரும்.

முருகப்பன் அவன் கூறிய மொழிகளைக்கேட்டு மன தில் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருப்பான் என் பதை இதை வாசிப்போரே எளிதில் யூகித்துக்கொள்ள லாகும். ஆயினும் அவன் பொறுமையோடேயே குல சேகரனை நோக்கி,

"காப்டென் குலசேகரம்! நீ கூறியது சினேகபாவ மான புத்தியே. நீ வலிய இதைக் கூறியதால் நான் இதைக் குறையாய் மதிக்கமாட்டேன். ஆயினும் ஒன்றுமட்டும் கேட்க விரும்புகிறேன். அதாவது உன்னிடம் சினேகம் பாராட்டியிருந்த மாதர்கள் உன்னிடம் இதேமாதிரி நடந்துகொண்டால் நீ எனக்குப் புத்தி கூறுகிறமாதிரியே

அவர்கள் நடக்கையை யலட்சியமாய்க் கருதுவாயோ?" என்று கேட்டான்.

குலசேகரன்:—"யார்-நானா? என்னோடு பழகும் மாதர்கள் இப்போது நம்மைவிட்டுச் சென்ற கன்னிகைகளின் அழகில் பாதி அழகுடையவர்களா யிருந்தாலும் அவர்களுக்கு என்மீது பிரியமிருந்தால் அத்தகைய இருபது கன்னிகைகளோடு வேண்டுமாயினும் நான் நகைப்பேன், பாடுவேன், நடனம்புரிவேன், காதல் செய்வேன். ஆனால் ஒரு சாதாரணமானுமியின் சமிக்கையில் அவர்கள் பிரியம்வைத்துச் செல்வதாயின் தங்கள் விருப்பப்படி செல்லுமாறு நான் அவர்களை விட்டுவிடுவேன். அவர்கள் எப்படி மாறிவிடுகிறார்களோ அப்படியே நானும் மாறிவிடுவேன்" என்றான்.

ஒரு வைத்தியன் தன்னிடம் வந்த நோயாளியை நோக்கி "சே! நானாகவிருந்தால் இந்த நோயைச் சட்டை செய்யவேமாட்டேன்" என்று கூறினால் அந்த நோயாளிக்கு எத்தகைய அதிருப்தி யுண்டாகுமோ அத்தகைய அதிருப்தியே இதைக் கேட்டவுடன் முருகப்பனுக்கும் உண்டாகியது. இன்னும் அவனுக்குக் கோபமும் சனித்தது. அதனாலவன் "காப்டென் குலசேகரன் போன்றவர்களுக்கே இத்தகைய அபிப்பிராயம் பொருந்தும்" என்றான்.

குலசேகரன்:—நண்பனே! நீ கோபமாய்ப் பேசுகிறாய். ஆனால் எனக்குக் கோபமூட்ட உன்னாலாகாது. ஆகையால் என்னோடு நீ சச்சரவிடவேண்டாம். இதோ நமது பைரவி கிருஷ்ணப்பரைக் கேளும்; அவர் "என்மேல் ஒரு வரிசை பீரங்கிகளை விட்டாலும் நான் பதிலுக்கு ஒன்றைக்கூடச் சுடமாட்டேன் என்று கூறுவார்" என்றான்.

**கிருஷ்ணப்பன்:**—"ஏ ஏ! முருகப்பன்! நீ குலசேகரனோடு நட்பாகவே யிருக்கவேண்டும். ஒரு பெண் சபலபுத்தி யுடையவளாக விருப்பதாலேயே உன் நண்பனோடு ஒருபோதும் சண்டையிட்டுக் கொள்ளாதே. பெண்கள் அத்தகைய சலனபுத்தி யுடையவர்களாக இராமல் ஒரே நிலையான புத்தியோடும் மனதோடுமிருந்தால் நாம் அவர்கள்மேல் அத்தனை கவிகளை யேன் பாடி யவர்களைச் சிறப்பிக்கிறோம்" என்றான்.

**குல:**—"ஆ! கிருஷ்ணப்பரே! நீர் கூறுவதாய்ச் சொன்ன பாட்டை மறக்கலாகாது" என்றான்.

**கிருஷ்:**—"ஆ! அப்பாட்டா? அதுவும் அதே நூலாசிரியரின் இன்னும் பதினைந்து அழியாத பாட்டுகளும் என்னிடமிருக்கின்றன. நீங்கள் அதைக் கேட்கவே வேண்டும்" என்று இருவர் கரங்களையும் பற்றிக் கொண்டான்.

குலசேகரன் முருகப்பனை நோக்கி "நண்பனே! இப்போது நாம் இவன் கையில் சிக்கிக்கொண்ட வரையில் இவன் கூறுவதைக் கேட்டே தீரவேண்டும்" என்று மெதுவாகக் கூறினான்.

**கிருஷ்:**—"வாலிபர்களே! பேசவேண்டாம். பேசவேண்டாம். நான் அதைக் கூறுகிறேன் கேளுங்கள்" என்று பின் வருமாறு கூறத்தொடங்கினான்:—

"நான் வாலிபனா யிருக்கையில் ஒரு நாளைக்கு ஒரு வேலை செய்துகொண்டு அல்லாடிக்கொண்டிருந்தேன். பிழைப்பிற்கு ஒருவழி யேற்படவில்லை. இத்தகைய சமயத்தில் என் சிற்றப்பன் ஒருவனிருந்தான். அவனுக்கு இத்தீவின் மேற்குக் கோடியில் ஓர் சிறு பூமியிருந்தது. அவன் இறந்தபோது அப்பூமியை யென் பெயருக்கெழுதி வைத்தான். அவன் இறந்தபோது என்னிடம் சொற்ப-

மிகச் சொற்ப பணமேயிருந்தது. ஆ! என் நண்பர்களே. இவ்வுலகில் நம் ஆயுள் முழுமையும் நாம் ஒரே நிலைமையி லிருப்பதில்லை. வண்டிச் சக்கரம் உருண்டு கொண்டே போவதுபோல் நமது நிலைமையும் மாறிக்கொண்டே போகிறது. ஒவ்வொருவர் நிலைமையும் இவ்வாறே யிருக்க அனுபவமாய்க்காணலாம். இருக்கட்டும். இப்போது நாம் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்? இல்லையில்லை. அப்படியல்ல நான் என் சரித்திரத்தைக் கூறிக்கொண்டிருந்தேன். ஆம் ஆம் எங்கே விட்டேன்?" என்றான்.

இவ்வாறே வயோதிகன் பசையற்ற சங்கதிகளைக் கூறிக்கொண்டும் இடையிடையில் எங்கு விட்டேன்? என்ன கூறினேன்? என்று கேட்டுக்கொண்டுமிருந்தான். வாலிபர் இருவர்க்கும் அவன் கதையைக் கேட்டதில் வெறுப்புண்டாய் விட்டது. குலசேகரன்,

"நீயுன் கதையை யெந்தப் பேயினிடம் விட்டாயோ அதையே கேட்கவேண்டும். அந்தப்பேய் யாரோ எனக்குத் தெரியாது" என்று கூறிவிட்டு அவ்வயோதிகன் பற்றியிருந்த தன் கரத்தைப் பிடுங்கிக்கொண்டு துரிதமாக அறையை விட்டு வெளியேசென்றான்.

அவன் நடக்கையால் வயோதிகன் மிக்க கோப மடைந்து "இந்த அரட்டல் பயல் மிக்க புத்தி கூர்மை யுடையவனே யெனினும், சுத்த அயோக்கியன்; இழிகுலப் பயல். இவன் உண்மைக்குணத்தை அந்தத் தைரியநாதம் பிள்ளையும் அவன் பெண்களும் உணராமலிருப்பது வியப்பே. இவன் பெரும் பொய்யான கட்டுக்கதைகளைக் கூறுகிறான். இவன் வார்த்தைகளில் அரைவாசி பொய். இவன் தான் கடலில் சண்டை செய்ததையும், வேறுவித மான தன் பெருமைகளையும் பன்னிப்பன்னிக் கூறுகிறான்.

என் அன்பார்ந்த வாலிபனே ! முருகப்பனே! இவன் நடக்கையிலிருந்து நீ எச்சரிக்கை யெடுத்துக்கொள். நீ ஒரு போதும் பெரிய கதைகளைக்கூறுதே. நீ ஒவ்வொரு சமயத்தில் உன் விஷயங்களைப்பற்றி, அதாவது நீ பாறைகளின் உச்சியிலேறிப் பட்சிகளைப் பிடிப்பதையும் முட்டைகளை யெடுப்பதையும் பற்றிப் பெருமையாகக் கூறிக்கொள்கிருய். இப்போது என் கதையைக் கேட்க நீ ஆவலுடையவனுயிருக்கிருயென்பது தெரிகிறது. நான் எங்கு விட்டேன்?'' என்ருன்.

முரு:—பெரியவரே! நாம் இச் சங்கதியைப்பற்றி விரித்த பின்புதான் பேசவேண்டும்'' என்ருன்.

இவ்வயோதிகனிடமிருந்து தப்பித்துக்கொண்டுபோய் விடவேண்டுமென்பதே முருகப்பன் எண்ணமும். ஆனல் குலசேகரனைப்போல் முரட்டுத்தனமாய் வயோதிகனை விட்டுச்செல்ல அவனுக்கு விருப்பமில்லை. சாந்தமும் மரியாதையுமான மொழிகளாலேயே பிரிந்துசெல்லவேண்டுமென்பது அவன் நோக்கம். ஆகையால் "பெரியவரே! இப்போது விருந்து வேளையாய்விட்டது. நாம் இங்கு தங்கியிருப்பது நியாயமாகத் தோன்ருது. ஆகையால் செல்லவேண்டியதே'' என்று கூறிக்கொண்டே எழுந்து செல்ல முயன்ருன்.

வயோதிகன் "ஓ வாலிபனே! நீயும் என்னைத் தனியே விட்டுச் செல்லாதே. நானே வயோதிகன்; அந்த மூடனைப் போல் பழைய நண்பர்களை யலட்சியம் செய்யாதே. நான் நடந்து ஆயாசமடைந்த போதெல்லாம் உன்போன்ற பழைய நண்பர்களின் தோள் உதவி கிடைத்தலே எனக்குப் பெரிய உதவியாயிருப்பது'' என்று கூறிக்கொண்டே

அவன் சட்டையைப் பற்றியிருந்த கைப்பிடியை யெடுத்து விட்டு அவனுடைய தோளைப் பற்றிக்கொண்டான்.

முருகப்பன் பார்த்தான் "அடடா இதென்ன சேற்றி லிருந்து விடுபட்டுக் கழுவில் சிக்கிய கதையாயிற்றே. நாம் இனியும் இவ்வயோதிகனிடம் முரட்டுத்தனம் காட்டுவது தகுதியல்லவே" யென்றுகருதிப் பேசாமலவனையழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

* * * *

அன்று தைரியநாதம்பிள்ளை வீட்டில் நடந்த விருந்து மிக்க ஆடம்பரமானது. கூட்டங்கூட்டமாய் வந்திருந்த விருந்தாளிகள் அனேகர். அத்தகைய விருந்தாளிகளுக்கு உபசாரம்செய்யவும், ஆகாரங்களை வட்டிக்கவும், மற்ற சௌகரியங்களைச் செய்யவும் அமர்த்தப்பட்ட ஆட்களோ பெருங்கூட்டம். அத்தீவிலிருந்த ஒவ்வொரு சிற்றூர்கள், கிராமங்கள், குக்கிராமங்களில் இருந்த குடும்பத்தார்க ளெல்லாம் அவ்விருந்திற்கு வந்திருந்தார்கள். அங்கு பெரிய மேஜைகள்மேல் பிரமாண்டமான பாத்திரங்களில் அறுசுவையுண்டிகள் குவியலாய் வைக்கப்பட்டிருந்தன.

எல்லப்பனும் அவன் தங்கையும் அந்த ஆகாரப் பெருக்கத்தையும் மற்ற ஆடம்பரங்களையும் கண்டு பிர மித்து விட்டார்கள்.

எல்லப்பன் "அடடா! இத்தகைய ஆடம்பரத்தோடு விருந்தளிக்கும் ஒரு சீமானிடம் நாம் இந்நாட்டின் ஆசா ரங்களைப்பற்றிய சீர்திருத்தத்தை யெப்படிப் புகல்வது? அவ்வாறு செய்வது தகுதியாயிருக்குமா? அகௌரவமாக வல்லவோ தோன்றும்" என்று கருதினான்.

ஆயினும் தனக்கு விருந்தளிக்கும் சீமானையும், அந்த விருந்திற்கு வந்திருக்கு மற்ற அனைவரையும் காட்டிலும் புத்திசாலித்தனத்தில் தானே சிறந்தவனாகவேண்டுமென்

றும், அதை வெளியிட முயன்றால், அத்தகைய உயர்தர கம்பீரமான விருந்தையளிக்கும் பெரிய மனிதனே யாவரினும் புத்தியில் மேற்பட்டவனென்று இங்கு வந்திருக்கும் விருந்தினர் அனைவரும் கருதுவார்களென்றும் கருதித் தான் தன் சீர்திருத்த ஆலோசனையைக் கூறுதிருப்பது தான் நலம் எனத் தீர்மானித்தான். ஆனால் அவன் மனதில் இன்னொரு கலக்கம். அதாவது தன் வீட்டில் தன் தங்கை முன்னும் முருகப்பன் முன்னும் இந்த விஷயத்தைப்பற்றித் தான் கூறப்போகும் ஏற்பாட்டைத் தைரியநாதம் பிள்ளை கட்டாயம் அங்கீகரிக்கவேண்டும் என்று பெருமையாய்க் கூறிக்கொண்டானதலால் இப்போது நாம் அதைப் பிரஸ்தாபிக்காமலே பேசாமலிருந்து விட்டால் அவர்கள் நம்மை இழிவாய் நினைப்பார்களேயென்ற நோக்கத்தால் அவ்விருவர் முகங்களையும் அடிக்கடி நோக்கியபடி யிருந்தான்.

பாப்பம்மாளுடைய சிந்தனைக்கும் அவன் சிந்தனைக்கும் வெகு தூரமாகவிருந்தது. தன் தமையன் அவ்வளவு பெருமையாய்க் கூறிக்கொண்டபடி தைரியநாதம் பிள்ளையிடம் அச்சீர்திருத்தங்களைப்பற்றிக் கூறுகிறானா என்ற சிந்தனையே யவளுக்கில்லை. அவள் எண்ணமும் நாட்டமும் அந்த விருந்தின் மேலேயேயிருந்தது.

“அடடா! என்ன தான் ஆடம்பரமாக விருந்தளித்தாலும் ஒவ்வொரு தட்டுகளிலும் இவ்வளவு பதார்த்தமா நிரப்பி வைக்கிறது. அட கடவுளே! ஒவ்வொருவரும் அந்தந்த பதார்த்தத்தில் எவ்வளவு எடுத்துக்கொள்கிறார்கள். இதென்ன இவர்கள் ஐந்தாறு நாட்கள் போசனம் செய்யாமல் வந்தவர்கள் போலல்லவோ காணப்படுகிறார்கள்; அடடா இவற்றில் மீதியாகக் கூடியவைகள் நம் வீட்டிற்கு ஒருவருடத்திற்குப் போதுமே. ஆயினும் அய்யா!

விருந்தாளிகள் இப்படிக்கூட அபாரமான உணவுகளைத் தின்னலாமா? இதென்ன பெரிய அசட்டுத்தனமாக வல்லோவிருக்கிறது. குடும்ப சிக்கனம் என்பதே இவர்களுக்குக் கனவிலும் தெரியாதுபோலும்" என்ற இத்தகைய சிந்தனையில் பாப்பம்மாள் இருந்தாள்.

அவ்வாறே முருகப்பனுடைய சிந்தனையும் எல்லைப் பன் விஷயத்தில் சற்றேனுமில்லை. விருந்து மண்டபத்தில் முருகப்பன் இரண்டு பெண்களுக்கிடையில் உட்கார வேண்டியிருந்தது. அவர்கள் ஒரு கிராமத்திலிருக்கும் செல்வந்தனுகிய ஒரு குடும்பியின் புதல்விகள். முருகப்பன் முன்பு தைரியநாதம் பிள்ளையின் வீட்டில் வசித்துக்கொண்டிருந்தபோது, இவர்களைச் சந்தித்த போதெல்லாம், தன் அன்பையும், மரியாதையையும் மீனுள், புனிதம் இவர்களிடமே சமர்ப்பித்து, இப்பெண்களை யலட்சியமாகவே நடத்தி வந்தான். அப்படி யிருந்தாலும் இச்சமயம் இத்தகைய கௌரவமுடைய வாலிபன் தங்கள் தோழனுகக் கிடைத்ததைப்பற்றி அவர்கள் மிக்க சந்தோஷமே யடைந்தார்கள். விருந்தில் நமக்குத் தோழனுக அமைந்த வரையில் பின்னுல் நடக்கும் நடனத்திலும் இவன் நமது ஜதையாகவே யமைவான் என்று எண்ணியே மகிழ்ச்சியடைந்தார்கள்.

அவர்கள் தேசாசாரப்படி வாலிபர்கள் கன்னிகைகளுக்குப் போசனம்செய்யும்போது உபசாரம் செய்ய வேண்டியதே நாகரீகம். அதாவது பதார்த்தங்களில் நல்ல பாகங்களைப் பொறுக்கி யவர்களுக்களிப்பது, அவர்கள் விரும்பும் பண்டத்தை முன்னுடியே குறிப்பையறிந்து எடுத்துக் கொடுப்பது முதலிய உபசாரங்களைச் செய்வார்கள். அதன்படியே முருகப்பனும் அக்கன்னிகைகளிடம் நடந்துகொண்டான். அப்படிச் செய்துகொண் டிருந்தா

லும் அவன் பார்வைமட்டும் மீனுள், புனிதம் இவர்க ளிருக்குமிடத்திலேயே யிருந்தது.

முதலாளியாகிய தைரியநாதனும் அத்திக்கில் நோக்க முடையவனுகவே யிருந்தான். ஆனல் அவன் தான் தன் விருந்தினர்க்கு அளிக்கும் விருந்தின் பெருமையையும் ஆடம்பரத்தையும் பற்றியே கவனித்துக்கொண்டிருந்தான்.

---

## 20-வது அத்தியாயம்.

காப்டென் குலசேகரன் இரண்டு சகோதரிகளுக்கும் இடையில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் இரு வரிடமும் மிக்க அன்புகாட்டி அவர்களை உபசரித்துக் கொண்டிருந்தான். முருகப்பன் தான் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து அவர்களை நன்ருய்ப் பார்க்கக்கூடும். அவர் கள் சம்பாஷணையையும் பெரும்பாலும் கேட்கக்கூடும். குலசேகரனுடைய விசேஷ நாட்டம் மூத்த சகோதரியின் மேலேயிருப்பதாகவே தெரிந்தது. அந்த விஷயம் இளை யவள் மனதில் உறுத்தியதுபோல் தோன்றியது. ஏனெ னில் அவள் அடிக்கடி முருகப்பனைப் பார்த்த பார்வை யால், தங்களுக்குள் இருந்த பழைய நட்பு அவள் மனதில் உறுத்துகிறதென்றும், இப்போது தாங்கள் கலந்துபேசாம லிருப்பதற்காகத் தான் வந்ததுபோலும் தோன்றியது. ஆனல் மீனுளோ குலசேகரனுடைய உபசரணையிலும் சம்பாஷணையிலுமே முழுகியவளாகத் தோன்றினுள். அதைக்கண்ட முருகப்பன் வியப்பும் துயரமுமடைந்தான். ஏனெனில் மீனுள் எப்போதும் ஏகாந்தத்திலிருந்து அறிவை விர்த்திசெய்யும் வழியில் செல்பவள். ஆடம்பர மான கேளிக்கைகளையும் உல்லாச நடக்கைகளையும் விரும் பாதவள். காப்டென் குலசேகரன் போன்றவனுடைய

வெளியாடம்பரமான மயக்கிற்கு உட்படும் குணமுடைய வளல்ல. அப்படிப்பட்டவள் தன் செவியையும் நயனங் களையும் அவன் விஷயத்தில் அர்ப்பணம் செய்வதாயின் அவள் அவனை யதிகமாகவே மதிக்கிருள் என்றே கருத வேண்டும் என்று முருகப்பன் நினைத்தான். இதனல் அவள் மேலும் குலசேகரன் மேலும் முருகப்பனுக்கு மிக்க வெறுப்புண்டாயிற்று.

"அடடா! அவனிடம் என்ன விசேஷ குணமிருக் கிறது? ஏதோ சில முரட்டுத்தனமான காரியங்களைக் கடற் பிரயாணத்தில் துணிகரமாய்ச் செய்திருக்கிருன். கப்பலில் தன் கீழிருக்கும் ஆட்களைக் குரூரமாயடக்கி யாண்டிருக்கி ருன். இதையன்றி வேருெரு பிரசித்தமான காரியமும் அவனிடமில்லை. அவன் சம்பாஷணை முழுமையும் கப்பற் படையைச் சேர்ந்த சம்பாஷணையே. ஆயினும் சாதாரண மான இராஜாங்க கப்பற் படை யுத்தியோகஸ்தர்கள் பேசும் அவ்வளவு நாகரீகமான சம்பாஷணை யிவனிடம் இல்லை. இதுகாறும் மீனுள் அத்தகைய சம்பாஷணையில் விருப்பமுற்றதில்லையே. புனிதத்திற்கும் இவன் சகவாசம் அவ்வளவாகப் பிடிக்கவில்லையென்றே தெரிகிறது" என் றிவ்வாறு முருகப்பன் சிந்திக்கலானுன்.

முருகப்பன் கோபத்தோடு செய்த இச்சிந்தனையில் இருபட்சத்திலும் தவறிவிட்டான் என்றே கூறலாகும். முதலாவது குலசேகரன் தன் போட்டிக்காரன் என்ற பொருமையால் அவன் விஷயங்களைப் பாரபட்சமாகவும் கடுமையாகவும் சிந்தித்துவிட்டான். குலசேகரன் ஆசாரங் களும் ஒழுக்கமும் நடைகளும் நாகரீகமுடையவையல்ல தான். ஆனல் அத்தகைய நாட்டில் அவை முக்கியமாகக் கவ னிக்கத்தக்கவையல்ல. ஆயினும் குலசேகரனிடம் கப்பல் மாலுமிகளிடம் சாதாரணமாகவுள்ள திறந்த மனம்மட்டு

மிருந்தது. மீனுளுடைய குணங்கள் குலசேகரன் நடக்கைகளுக்கு மாருக விருந்தால் அவள் அவனிடம் பிரியம் கொள்ளமாட்டாளென்று முருகப்பன் தவறியது ஒரு பிசகு. அவனுக்குச்சரியான உலக அனுபவமிருந்திருந்தால் பெண்களின் நடக்கையைப்பற்றிச் சரியாயறிந்துகொண்டிருப்பான்.

பெண்களின் குணம் பலவிதமானது. அவர்கள் இரக்கமான மனமுடையவர்கள். மேல் நாட்டுப் பெண்கள் துணிகரமானதும், தைரியமானதுமான செய்கையுடையவனைப் புகழும் குணமுடையவர்கள். தமோகுணமுடையவர்கள். அத்தகைய செய்கைகளை யதிகமாய்ப் புகழ்வார்கள். ஆனுல் இவர்களால் புகழப்படுவது சுத்தவீரத்தனமன்று ; நியாயமான காரியத்தில் பிறர் நலத்திற்காகத் தன் உயிரைப் பொருட்படுத்தாமல் யுத்தகளம் சென்று முன் வைத்த காலைப் பின் வைக்காமல் போர்புரிந்து வெற்றி பெறுவது அல்லது மாற்ருன் கையால் மாள்வதுதான் சுத்தவீரத்தனம். நம் நாட்டுப் பூர்வீக மாதர்கள் அத்தகைய சுத்த வீரத்தன்மையையே புகழ்ந்தவர்களாயிருந்தார்கள். இங்கு குலசேகரன் தான் கப்பற்சண்டையில் பன்முறை காட்டிய அற்புத சாமார்த்தியத்தையும் தைரியத்தையும் கூறினுன். அம்மட்டிலேயே மீனுள் அவனை விசேஷமாக மதித்துவிட்டாள். அதிலும் அங்குள்ள ஆடவர்களும் அவன் செய்கைகளைப் புகழ்ந்தபடியால் அப் பெண்பால் மயங்கி இவன் எந்த யுத்தக்கப்பலிலிருந்தான்; அரசனுடைய எந்த எதிரிகளோடு போர் புரிந்து வீரத்தனமாய் யுத்தம் புரிந்து ஜெயம் பெற்ருன் என்பவற்றை எவரும் ஆராயவில்லை.

அந்நாட்டார் வழக்கப்படி விருந்தினர் வந்தவுடனே அவர்களுக்கு முன்னே இளைப்பு நீங்கவும் தாகம் தணிய

வும் பீர், ஒயின் முதலிய மதுபானங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் அவற்றை யருந்தியபின் அவர்களுடைய புத்தி முன் பின் விஷயங்களில் செல்லாமல் விலங்கிடப்பட்டது போல் தற்கால விஷயத்திலேயே பதிந்து விட்டது. அதனல் அவர்கள் குலசேகரனுடைய சாமார்த்தியங்களை மட்டும் நினைத்துப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். முருகப்பன் விருந்து நடக்கும்போது கடைசிவரையில் இரண்டு சகோதரிகளையும் கவனித்துக்கொண்டே யிருந்தான். மூத்தவளாகிய மீனுளின் மனமும் நாட்டமும் முழுமையும் குலசேகரன் சம்பாஷணையிலேயே யிருந்ததையும் மற்ற விருந்தினரை யவள் ஏறெடுத்துப் பார்க்காததையும், புனிதவதி கலக்கமும் விசனமுமுடைய மனதோடு நாற்புறமும் விசேஷமாய்ப் பார்த்து அடிக்கடி தன்னையும் கவனித்துக்கொண் டிருப்பதையும் உணர்ந்தான். இந்த இரண்டு பெண்களும் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார்களென்று பிச்சிமலை நாகம்மாள் கூறினள். ஆனல் அதன் விவரமாவது காரணமாவது அவள் கூறவில்லை. இங்கு நடக்கும் விஷயங்களைக் கண்டபோது இக்குலசேகரனுடைய நடக்கையின் உண்மையை யறியாத இவனிடம் அன்பு கொள்வதாலேயே யிவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்வார்கள் என்பது அவன் புத்தியிற் புலப்பட்டது. ஆகவே அவனுடைய நடக்கைகளை நாம் கண்டறிய வேண்டுமென்று அவன் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அதோடு சீக்கிரம் சமையம் வாய்க்கும்போது புனிதவதியிடம் கலந்து பேசவேண்டுமென்றும் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

முருகப்பன் இருபுறங்களிலும் இருந்த கன்னிகைகள் அத்தீவில் செல்வவதிகளாகக் கருதப்பட்டவர்களே. ஒருத்தி பெயர் மரகதம். மற்றவள் பெயர் கல்யாணி.

அவர்களோடு கூட அவர்களின் சிறிய தாயாகிய இராமா பாய் என்பவள் வந்திருந்தாள். அவர்கள் முருகப்பன் பக்கலில் உட்கார நேர்ந்ததைக் கௌரவமாகவே கருதினார்களென்றும், விருந்தில் நமது பக்கலில் உட்கார்ந்தபடியால் இனி நடக்கப்போகும் நடனத்திலும் அவன் நமக்குச் சதையாய் வருவானென்று மகிழ்ச்சி யடைந்திருந்தாகள் என்றும் முன்னமே கூறினோம். அவர்கள் ஆசாரப்படி முருகப்பன் அவர்களிருவர்க்கும் மரியாதையோடு உபசாரம் செய்துகொண்டும் அவர்களுக்குப் பிரியமாகவிருக்குமாறு சம்பாஷித்துக்கொண்டு மிருந்தான். அப்படியிருந்தாலும் தான் அவர்களிடம் அன்பு காட்டி நடப்பதாய் மீனாளும் புனிதமும் எங்கு நினைத்துக்கொள்கிறார்களோ வென்று அச்சத்தோடு அவர்களை நோக்கிக்கொண்டிருந்தான்.

நேயர்களே! மேல்நாட்டு ஆசாரத்தின் இலட்சணத்தைக் கவனியுங்கள். தன்னை யலட்சியம் செய்து விட்ட பெண்களிடம் அவன் அத்தகைய மதிப்பு வைக்கிறான்—ஏன்? ஸ்திரீயின்மேல் வைக்கும் அன்பு பரிசுத்தமானதென்று அவர்கள் கருதுகிறார்கள். கடவுளின் மேல் வைக்கும் அன்பு எத்தகையதென்ற அளவும் பெருமையும் அவர்களுக்குத் தெரியாது. ஸ்திரீயின் அன்பினாலடையும் சுகமே யாவற்றினும் மேலான ஆனந்தம் என்பதே அவர்கள் கொள்கை. இத்தகையோர் நாகரீகத்தையும் ஆசாரத்தையும் பின்பற்றி நடக்க முயலும் நம் நாட்டாரில் சிலருடைய மதியீனத்தை யென்னென்று தான் கூறலாம். மாதர் மயக்கமே முதற்றரமான மாயையாகும். அதிற் சிக்காமல் தப்பியவனே ஈசுவரன் அருள் பெறுவான். ஏனெனில் அந்த ஒரு மாயையை வென்றவன் உலகமாயை முழுமையும் வென்றுவிடலாம். இம்மாதர் மாயையே எவ

ராலும் வெல்லற்கரியது. எப்படிப்பட்ட மகரிஷிகளுங் கூட அதிற் சிக்கியல்லற்பட்டிருக்கின்றனர். ஆனால் பாபம் மேல் நாட்டார்க்கு இந்த உண்மை தெரியாது.

முருகப்பன் கடைசியில் குலசேகரனுடைய உண்மையையறிந்து மீனாளையும் அவள் தங்கையையும் நாம் ஆபத்தில் சிக்காதபடி காப்பாற்ற வேண்டுமென்று இரகசியமாய் தனக்குள் தீர்மானித்துக் கொண்டான். அவனுக்குள் ஏற்பட்ட இத்தீர்மானத்தால், அவனுக்கு மரகதம் கல்யாணி என்ற இருவர் மேலுமிருந்த கவனம் வரவரக் குறைந்தது. அந்த விஷயத்தை யக்கன்னிகைகள் உணர்ந்திருக்கலாகும். ஆனால் அதற்குள் மாதர்கள் போஜன கூடத்தை விட்டுச் செல்லலாம் என்ற மணியடித்தது.

அதென்னவெனில் ஆடவர் மகளிர் இருபாலாருமே சமரசமாய் உட்கார்ந்து போஜனம் செய்வது அவர்கள் ஆசாரம். அதிலும் ஒரு ஆடவன் தன் நண்பன் அல்லது தான் மதிக்கத்தக்க இன்னொருவன் மனைவி அல்லது சகோதரி, மகள் முதலியவர்கள் பக்கலிலுட்கார்ந்து புசிப்பதும் அப்படியே இவன் மனைவியும் இன்னொருவன் பக்கலில் உட்கார்ந்து விருந்துண்பதும், அவ்வாறே ஜதைசேர்ந்து நடனம் புரிவதும் அவர்களுக்குள் நாணயமாகவும் நாகரீகமாகவும் கருதப்படுகின்றன. இவ்விஷயத்தில் கலியாணமான மாதரென்றும் கன்னிகை யென்றும், பிரம்மசாரி யென்றும் வித்தியாசமில்லை. இத்தகைய நாகரீகத்தால் எத்தகைய தீங்குகளும் விபரீதங்களும் நேரிடலாகும்! நேரிடுகின்றன என்பதைப்பற்றி நாம் கூறவேண்டுவதே யில்லை. இதை வாசிப்போரே உய்த்துணரலாகும். இவர்கள் போசன ஆரம்பத்தில் சாராயம் குடிப்பதில்லை. சாதாரண ஆகாரமருந்திய பின்பு சாராயம் ஒயின் முதலிய குடிவகைகளையும் அவற்றிற்கேற்ற சிற்றுண்டி பழவகைகளையும்

அருந்துவார்கள். ஆகவே சாராயம் அருந்தப்போகும் வேளையில் மாதர்கள் வேறு அறைக்குச் சென்று விடும்படி கூறப்படுவார்கள். ஆகையால் தான் அங்கு அவ்வாறு அறிவிக்கப்பட்டது.

மீனாள் விருந்து மண்டபத்தை விட்டுச் செல்லும் போது அங்கிருந்த விருந்தினர் அனைவரையும் ஒரே நோக்காகப் பார்த்து வந்தனமளித்துச் சென்றாள். ஆனால் அவள் பார்வை குலசேகரன் மேல் நாட்டப்பட்டபோது மட்டும் அவள் முகத்தில் அன்பின் பிரகாசம் உண்டாகியிருந்தது. புனிதவதி எப்போதும் தன் மனதிலிருக்கும் கலக்கத்தைப் பூரணமாய் மறைத்துக்கொள்ளக் கூடாதவள். ஆகையால் அவள் சற்று தடுமாற்றத்தோடேயே யாவர்க்கும் வந்தனமளித்து விட்டுச் சென்றாள். அங்கு அத்தனைபேர் இருந்தாலும், அவளுடைய பார்வை தன் மேல் நாட்டப்பட்டதென்று முருகப்பன் உணர்ந்தான். அம்மாதிரியவள் குறிப்பாக அவனை நோக்கியது இரண்டாம் முறை. இம்முறை முருகப்பன் அவள் பார்த்ததை நோக்கியதோடு அதற்கு விடை யளிப்பதுபோல் தானும் அவளை யுற்று நோக்கினான்.

மாதர்களனைவரும் விருந்து மண்டபத்தை விட்டுச் சென்றதும், தைரியநாதம் பிள்ளை தமது சமையற்காரத் தலைவனை யழைத்தார். அவன் சமையல் வேலைக்குத் தலைவனாக விருப்பதோடு வீட்டிலுள்ள மற்ற வேலைகளையும் செய்கிறவன். அவன் அருகில் வந்ததும் தைரியநாதன் அவனை நோக்கி, "எங்கே உன் கலப்புப்பாத்திரம்? அது தயாராக விருக்கிறதா?" என்றார்.

**சமையற்காரன்:**—"ஆகா ஒயின் வகைகளும், பிராந்தி வகைகளும், நேர்த்தியான சர்க்கரையும், முதல்தர

எலுமிச்சம் பழங்களும் ஏராளமாக விருக்கின்றன"
என்றான்.

அவன் கூறிய விவரத்தைக் கேட்டதே விருந்தினரனை வரும் கலீலென்று நகைத்தார்கள். இதற்குள் சமையற் காரன் உள்ளே சென்று ஒரு பிரம்மாண்டமான சீனபாத் திரத்தை யெடுத்து வந்தான். அதை யவன் சுமக்க முடி யாமல் தூக்கிக்கொண்டு வந்தான். அதில் மேல் கூறப் பட்ட கலப்புச் சாராயம் நிறைய விருந்தது. கலப்புச் சாராயமெனில் பலவிதச் சாராய வகைகளும், சர்க்கரை, எலுமிச்சம்பழ ரசம், ஏலம், ஜாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் இவை சேர்ந்த கலப்பு. பெரிய விருந்துகளில் இத்தகைய கலப்புச் சாராயத்தை ஏராளமாய்ச் செய்து அதிகமாய் யாவரும் குடிப்பது அவர்களுக்குள் வழக்கம். அவ்வாறு குடித்த பின்பே அவர்கள் நடனத்திற்குச் செல் வார்கள்.

அப்படி நடனம் செய்யும்போது ஒரு ஆடவன் தான் கௌரவப்படுத்த நினைக்கும் தன் நண்பனுடைய மனைவி யோடு அல்லது அவன் கூட வந்திருக்கும் அவன் நெருங் கிய சுற்றத்தைச் சேர்ந்த மாதோடு ஜதை சேர்ந்து நடனம் புரிவதே அவர்களுக்கு மிக்க நாகரீகமும் ஒழுங்குமாகக் கருதப்பட்டிருக்கிறது. அந்தப் பெரிய பாத்திரம் மேஜை மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டதே வீட்டிற்குச் சொந்தக்காரனாகிய தைரியநாதம் பிள்ளை கடவுளை வாழ்த்தி அங்கு வந்திருக்கும் விருந்தாளிகளின் க்ஷேமத்திற்கும் அத்தீவின் க்ஷேமத்திற்கும் கடவுளைப் பிரார்த்தித்து ஒரு பெரிய கிண்ணம் நிறைய அக்கலப்புச் சாராயத்தையூற்றி மிக்க பக்தியோடருந்தினான். அதன் பின் வந்திருந்தவர் களில் ஒவ்வொருவரும் தீவின் முதலாளியும், தங்களுக்கு அத்தகைய நேர்த்தியான விருந்தையளிக்கும் உதார புரு

ஷனுமாகிய தைரியநாதம் பிள்ளையின் க்ஷேமத்திற்காகவும், அவர் குடும்ப க்ஷேமத்திற்காகவும் கடவுளை வாழ்த்தி ஆளுக்கொரு கிண்ணம் அருந்தினர்கள். அதன் பிறகு குடிப்பது தாராளமாய் விட்டது.

எல்லப்பன் பிள்ளை இதுகாறும் தான் செய்யக் கருதிய சீர்திருத்தங்களைப் பற்றித் தைரியநாதம் பிள்ளையிடம் கூறலாகாதென்று முருகப்பன் கூறிய ஆலோசனைப் படி யெண்ணியிருந்தான். ஆனல் இப்போது குடியினு லுண்டான போதை யேற வேற அவன் அந்தச் சாந்த யோசனையை மறந்து தன் சீர்திருத்த ஏற்பாடுகளைப்பற்றித் தைரியநாதம் பிள்ளையிடம் துணிகரமாய் வெளியிடத் துணிந்தான். மதுவை யருந்துபவனுடைய நியாயமான யோசனையைக் கலைத்து அவனை நெறிதவறி நடக்கச் செய்வதால் தான் மதுபானம் தகாத பாதகம் என்று கண்டிக்கப்பட்டது.

---

## 21-வது அத்தியாயம்.

எல்லப்பன் பிள்ளை தைரியநாதம் பிள்ளைக்குக் கூறிய சீர்திருத்த ஆலோசனையின் பயன் என்ன வாயிற்றென்று பார்ப்போம்.

ஆடவர்களெல்லாம் குடிக்கும் ஆனந்தத்தில் முழுகிக் கொண்டிருக்கையில் முருகப்பனுக்கு மட்டும் அதில் விருப்பமில்லை. அவனுக்குத் தன் தந்தையைப்போலவே கூடியவரையில் தனியாகவிருந்து ஒரு விஷயத்தை யனுபவிப்பதிலேயே விருப்பம். அதனல் அவன் பைரவி கிருஷ்ணப்பன் கூறும் கதையைக் கேட்பதிலேயே விருப்ப முடையவனுகவிருந்தான். கிருஷ்ணப்பன் தன் புராணக் கதையைக் கூறத்தொடங்கினன். முருகப்பனுக்கு அதைக்

கேட்க விருப்பமில்லையெனினும் அவன் என்ன செய்வான். இடையிடையில் அவன் கதையை யெத்தனை முறைகள் தடுக்க முயன்றாலும் கிருஷ்ணப்பன் விடுபவனாயில்லை. அட்டையைப்போல் முருகப்பனைக் கெட்டியாய்ப்பற்றிக் கொண்டான்.

கடைசியில் முருகப்பனுக்கே பூரண வெறுப்புண்டாய் விட்டது எப்படியேனும் இவனை விட்டு நாம் நீங்கிக் கொள்ளவேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு அதற்கென்ன வழியகப்படும் என்று பார்க்கத் தொடங்கினான். அச்சமயம் முதலாளியாகிய தைரிய நாதம் பிள்ளை ஆத்திரத்தோடு ஏதோ பேசும் சத்தத்தைக் கேட்ட கிருஷ்ணப்பன் "ஆ! இதென்ன தைரியநாதம் பிள்ளை யிவ்வளவு ஆத்திரத்தோடு பேசுகிறாரே? என்ன சங்கதி?" என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட நமது முருகப்பன் இதுதான் சமயமென்று கருதி "ஆ! என்ன சங்கதி பார்க்கிறேன்" என்று கூறிக்கொண்டே கிருஷ்ணப்பனைப் பிரிந்து சென்றான்.

அங்கு சந்தடி நேர்ந்ததன் காரணம் என்னவெனில் எல்லப்பப்பிள்ளை மெதுவாய்த் தைரியநாதம் பிள்ளையை நெருங்கித் தன் சீர்திருத்த ஏற்பாடுகளைப்பற்றி அவரிடம் கூறத்தொடங்கினான். அவனுடைய ஏற்பாடுகளைக் கேட்ட தைரியநாதம் பிள்ளை ஆரம்பத்தில் கூறியவரையில் சாந்தமாகவே வாதம் செய்து கொண்டிருந்தான். அப்படி கூறுவதால் அவன் விவகாரம் நியாயமானதே யென்று இதை வாசிப்போர் கருதி விடலாகாது. தைரியநாதம் பிள்ளையின் நோக்கமனைத்தும் "நமது பூமி இப்போதிருக்கிற மாதிரியே யிருக்கட்டும். நமக்கு வரவேண்டிய வருமானம் வந்துகொண்டிருக்கிற வரையில் நாம் அதன்

பொருட்டாகப் பணச்செலவு ஏன் செய்யவேண்டும்? இருக்கிற காடு இப்படியேயிருக்கட்டும். இப்போது நடக்கிற விவகாரம் நடந்துகொண்டு தானேயிருக்கிறது. இத்தீவிலுள்ள அநாகரீகமான மனிதர்கள் எத்தகைய பாதைகளிலும் நடந்து செல்வார்கள். இந்த எல்லப்பன் போன்றவர்கள் அவர்களுக்குச் செப்பனிட்ட பாதையைப்பற்றி அறிவிக்கிறார்கள். அவர்களுக்கு அத்தகைய சங்கதிகளேதெரியாது. இந்த எல்லப்பனலேயே யிக்கலகம் ஏற்படுகிறது" என்ற தீர்மானத்தில் திரும்பிவிட்டது. அதனுல் ஆத்திரமடைந்தே அவர் எல்லப்பப்பிள்ளையோடு வாதம் செய்யத் தொடங்கினர். அந்தக்கூச்சலே முருகப்பனுக்கும் கிருஷ்ணப்பனுக்கும் கேட்டது.

நேயர்களே ! இத்தகைய விஷயங்களில் ஒருவாதம் நேரும்போது, அருகிலிருப்போர் செல்வாக்கும் செல்வமுடையோர் பக்கம் பேசுவதேயன்றி நியாயத்தின் சார்பாய்ப் பேசுவது கிடையாது. இக்கலியுகத்தில்தான் இந்த நீதி தாராளமாய் நடக்கிறது. இக்காலத்தில் பாரபட்சமற்ற நீதியைப் பெரும்பாலர் கவனிப்பதில்லை. அதாவது, விவகாரமென்ன வென்பதைமட்டும் கவனித்து அதற்குள்ள நியாயத்தைக் கூறுவதைவிட்டு இருகட்சிகளிலுமுள்ள ஆட்கள் யார் என்பதையே முன்னடிக் கவனிப்பார்கள். அவற்றில் செல்வமும் செல்வாக்குமுடையவன் எவனே அவன் பக்கமே சேர்வார்கள். அவன் நடக்கையே நீதியானதென்று சாதிக்க முயல்வார்கள்.

அவ்வாறே யிவ்விஷயத்திலும் ஒருவரேனும் எல்லப்பப்பிள்ளையின் சீர்திருத்தம் பொதுஜன நன்மையை நோக்கமாகவுடையதென்றும் அவன் திருத்தங்கள் நிறைவேற்றத் தக்கவையென்றும் வாதிக்க முன்வரவில்லை. அப்

படியிருக்க எல்லப்பப்பிள்ளை யென் செய்வான்? இனி என்ன பேசுவதென்று அவனுக்குப் புலப்படவில்லை.

அச்சமயம் தைரியநாதம் பிள்ளை அவனை நோக்கி "எல்லப்பரே! உமது ஆலோசனைகள் காலங்கடந் தவை. ஆயினும் நீர் நமது நண்பர் ஆனபடி யால் அதை யடியோடு நிராகரித்து விடுவது எனக்கு யுத்தமாகத்தோன்றவில்லை. இதைப்பற்றி நாம் பின்னுல் சாவதானமாக ஆலோசனை செய்யலாம். ஆயினும் முன்னோர்கள் இருந்த நிலைமையை யடியோடு மாற்றிவிட்டு ஒரு புது விதமான சீர்திருத்தத்தை ஸ்தா பிப்பது மூடத்தனமே யென்பது என் அபிப்பிராயம். காலத்திற்குத் தக்கபடி சில மாறுதல்கள் ஏற்படவேண்டி யது உண்மையே. ஆனுல் அத்தகைய மாறுதல்கள் இடம் காலம் சந்தர்ப்பம் முதலியவற்றை யனுசரித்தவையாக விருக்கவேண்டும். கண்மூடித்தனமாய்ச் சீர்திருத்தங்களை யுண்டாக்கிக்கொள்வதை விட மூடத்தனமான செய்கை வேறில்லை. ஒரு நாட்டார் செய்கிற மாதிரியைப்பார்த்து இன்னொரு நாட்டார் நடப்பது மிக்க மூடத்தனமாகும். மிக்க குளிர் நாட்டிலிருப்பவன் தடிப்பான கம்பளிப்போர் வையைப் போர்த்துக்கொள்கிருன். அதைப் பார்த்து உஷ்ண நாட்டிலிருப்பவனும் அப்படியே செய்வதெனின் என்ன மூடத்தனம்.

இக்காலத்தில் அனேகர் பழைய வழக்கங்களை யடி யோடு நிக்கிரகித்து விடுவதே நாகரீகமென்று கருதுகிருர் கள். பழைய நாகரீகமும் ஆசாரங்களும் எத்தகைய காரணத்தோடு ஏற்படுத்தப்பட்டன வென்பது இந்த மூடர் களுக்குத் தெரியாது. ஆயினும் காலப்போக்கின்படி அவற்றில் சிற்சில அம்சங்களில் மாறுதல் வேண்டுமென் பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் சிலர் மூடத்

தனமாய் அவற்றை யடியோடு நிராகரிப்பதை நான் ஒரு போதும் ஒப்பமாட்டேன்" என்று கூறியபோதே தைரிய நாதம் பிள்ளை சற்று ஆத்திரத்தோடு பேசினர். அச்சம யம்தான் பைரவி கிருஷ்ணப்பன் அதைக் கவனித்து முரு கப்பனுக்குக் கூறினன்.

அதேசமயம் தைரியநாதம் பிள்ளை மேலே கண்ட விஷயத்தைக் கூறியபின் எல்லப்பனை நோக்கி,

"நண்பரே! நீர் நமது தீவிலிருப்பவர்களில் முதன்மை யான நண்பர். இப்போது விருந்து முடிந்துவிட்டது. மாதர்கள் நடனத்திற்காக மிக்க ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிருர்கள். நாம் இன்னும் ஆலசியம் செய்வது மரியாதையல்ல. உமக்குத் தெரியாத நியாயம் நான் கூறப்போவதில்லை. ஆகையால் நாம் இனி ஆலசியமின்றி நடனசாலைக்குச் செல்லவேண்டியதே. சீக்கிரம் புறப்படுங் கள்" என்ருர்.

விருந்தளிக்கும் முதலாளியின் வார்த்தையைக் கேட் டதே ஏறக்குறைய அனைவரும் அங்கிருந்து நடனசாலைக் குக் கிளம்பினர்கள். தாராளமாகக் குடிப்பதில் விருப்ப முடைய சிலர் இன்னும் மிகுதியாயிருக்கும் சாராயவகை களையும் சிற்றுண்டிகளையும் ஒழிப்பதில் விருப்பமுடையவர் களாய் அங்கேயே தங்கி விட்டார்கள்.

சற்று நேரத்திற்குள் நடனம் தொடங்கியது. அங்கு வந்திருந்த அனைவரும் ஆடவரும் மாதருமாய் ஜதை பிரிந்து நடனம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். வயது முதிர்ந்தவர்களை எந்தக் கன்னிகை சட்டை செய்வாள்? அத்தகைய வயோதிகர்கள் ஒரு பக்கம் உட்கார்ந்து தங் கள் காலத்தில் நடந்த நடனத்திற்கும் இப்போது நடக்கும்

நடனத்திற்கும் உள்ள தாரதம்மியத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

முருகப்பனை யாரும் ஜதை சேர்த்துக்கொள்ளவில்லை. இதுகாறும் அந்த வீட்டில் நடந்த எத்தகைய விருந்திற்கும் நடனத்திற்கும் அவனே முதலாளியாக விருந்து அவற்றை நடத்தியவன். அப்படியிருந்த தான் யாவராலும் அசட்டை செய்யப்பட்டுத் தனிமையாய் நிற்கவேண்டியிருந் தால் அவன் மனம் எத்தகைய வேதனைப்படும்?

ஏன் இவ்வேதனை? அற்பமாகிய மாதரின் நட்பை யொரு பெரிய கௌரவமான காரியமாகக் கருதியதா லல்லவா இம்மனவருத்தம் நேர்ந்தது? உலகபோகங்க ளனைத்திலும் மாதர் அன்பே மேலானதென்றும் அது தெய்வீகமானதென்றும் கருதும் இவர்கள் கொள்கையும், கலியாணமாகாத கன்னிகைகள் வாலிப புருடர்களிடம் நட்புக் கொண்டாடுவது உயர்தர நாகரீகமென்று கருதி நடக்கும் இவர்கள் ஆசாரமுமே யிதற்கு விஷம் போன்ற மூலகாரணங்களாகும்.

இப்போது தன்னை யொருவரும் நடனத்தில் ஜதை சேர்த்துக்கொள்ளாதது முருகப்பனுக்கு மிக்க மனவருத்த மாகவும் அவமானமாகவும் இருந்தது-பார்த்தான்-தான் இதுகாறும் அசட்டை செய்தவர்களும், இந்த விருந்தில் தன் இருபுறங்களிலும் உட்கார்ந்திருந்தவர்களுமாகிய மரக தம், கல்யாணி என்ற இரண்டு கன்னிகைகளும் அந்த முதல் நடனத்தில் யாரோடும் சேராமல் இருப்பதைக் கண்டான். ஆகையால் அவர்களை நெருங்கி அவர்களில் ஒருவரைத் தன் ஜதையாய்வந்து நடனம் செய்யும்படி கோரிக்கொண்டான். பூர்வீக உணர்ச்சியுடைய இராமாபாய் என்பவள், முருகப் பன் முன்பு தைரியநாதர் புத்திரிகளிடம் சிநேகமாயிருந்த காலத்தில் மரகதத்தையும் கல்யாணியையும் அலட்சியமாக

நடத்தியதை மறந்துவிடவில்லை. ஆகையால் அவன் தன் புத்திரிகளைக்கேட்ட கேள்விக்குத் தானே முன்னுடி விடையளிக்கக் கருதி அவனை நோக்கி "வாலிபரே! நீர் அவர்கள் விஷயத்தில் காட்டிய கௌரவத்திற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். ஆனுல் இந்த இரவு அவர்கள் இன்னொருவரோடு நடனம் செய்ய ஒப்புக்கொண்டார்கள் என்று கூற விசனிக்கிறேன்" என்று கூறினுள்.

முருகப்பன் வேணுமென்றே அவர்கள் நடக்கையைக் கவனித்துக்கொண் டிருந்தான். சற்று நேரத்திற்குள் அக் கன்னிகைகள் புதிதாய்த் தங்களை நடனத்திற் கழைத்த ஒரு வாலிபனேடு சேர்ந்துகொண்டு நடனம் செய்யத் தொடங்கினுர்கள். ஆகையால் அவர்கள் தன்னை வேணுமென்றே நிராகரித்து விட்டார்கள் என்று அவன் அறிந்து கொண்டான். அதைக் கண்டதே முருகப்பனுக்கு மிகக் கோபமுண்டாகிவிட்டது. தன் அவமானத்தைப் பிறர் அறிவது அவனுக்கு மிக்க மனவருத்தமாகவிருந்தது. ஆகையால் அவன் அந்த நடனசாலையை விட்டுக் கிளம்பித் தன் ஆட்கள் கூடியிருக்குமிடத்தில் சென்று அவர்கள் கூட்டத்தில் மறைந்து தன் மன வருத்தத்தை யாற்றிக் கொண் டிருந்தான்.

நடனத்தில் பிரியமில்லாதவர்கள் தங்கள் காலத்தைச் சந்தோஷத்துடன் கழிப்பதற்காக அங்கு வேறு பலவிதமான விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பைரவி கிருஷ்ணப்பன் தன் பிரசங்க சாதுரியத்தால் ஒரு சிறு கூட்டத்தைத் தன்னிடம் சேர்த்துக் கொண்டான். ஒரு பாடகனிடம், அதிலும் தங்கள் தேசாசாரப்படி பிரசித்திபெற்ற ஒரு பாடகனிடம், அபிமானமுள்ள ஜனங்கள் சேரும்போது என்ன நடக்கும்? அப்பாடகன் அவர்களைச் சந்தோஷிப்பிக்க ஒரு பாட்டுப்பாடவேண்டியதே. அவ்

வாறே கிருஷ்ணப்பன் ஒரு பாட்டுப் பாடத்தொடங்கினான். அது வீரரசமுடைய ஒரு யுத்தப்பாட்டு. அது முற்காலத்தில் வடநாட்டிலிருந்தவர்கள் தாங்கள் நினைத்தபோது வந்து கீழ்நாடுகளைத் தாக்கிக் கடலிலும் கரையிலும் கொள்ளையடித்துச் செய்த அக்கிரமங்களைப் பற்றியது.

அப்பாட்டைக்கேட்ட எல்லப்பப்பிள்ளையின் மனம் கொதிப்படைந்து விட்டது. அவன் தன் ஆத்திரத்தை யடக்கமுடியாமல் "பேஷ்! நல்ல யுத்த வீரர்கள்! பூமியைத் திருத்திப் பண்படுத்தி நல்ல தானியங்களைப் பயிர்செய்து நிம்மதியாய்க் காலக்கழிக்கத் தெரியாத மூடப்பயல்கள். ஒருவரையொருவர்கொன்று அன்னியர் பொருள்களைப் பறித்து அவர்கள் ஆகாரமின்றி மடியச்செய்து தம் வரையில் தின்று கொழுத்து உயிர்வாழும் அக்கிரமஸ்தர்கள். மனிதத்தன்மையற்ற மிருகங்கள். பேஷ்! நல்ல யுத்த வீரர்கள்!" என்றான்.

கிருஷ்ணப்பன் "அவர்கள் வீரத்தன்மை யுனக்கென்ன தெரியும்? கொந்தளிக்கும் நடுக்கடலில் தங்கள் கப்பல்கள் அலைகளால் மலையளவு உயரம் மேலெழும்பிக்கொண்டும், பாதாளமட்டும் கீழே சென்றுகொண்டுமிருக்கையில் தரையில் நடமாடுவதைப்போல் இருபுறங்களிலும் சாய்ந்து கொண்டிருக்கும் அக்கப்பலிலிருந்தபடி தங்களுடைய அகலமான பளபளப்புடைய வாள்களால் எதிரிகளை வென்று அவர்கள் கப்பலிலுள்ள சாமான்களை யெல்லாம் பற்றிக்கொண்டு ஜெயபேரிகை யடித்தார்கள்" என்றான்.

அச்சமயம் நடனத்தைவிட்டு இளைப்பாறிய குலசேகரன், பைரவி கிருஷ்ணப்பனிடம் வந்து "பேஷ்! நன்று கூறினை. நீ கூறியவை வீரமொழிகள்" என்று அவன் தோளைத் தட்டினான். குலசேகரன் தன் கட்சியில் சேர்ந்து தன்னைப் பெருமைப்படுத்திப் பேசியதைக்கண்ட கிருஷ்

ணப்பனுக்கு உற்சாகம் அதிகமாய் விட்டது. அதனாலவன் குலசேகரனை நோக்கி,

"ஏ வாலிபனே! உனக்குள் வீரரின் இரத்தம் ஓடுகிற தென்று தெரிகிறது. வீரத்தன்மையான செய்கைகளை யாவருமே அறிந்து சிலாகிக்க முடியாது. எங்கள் முன்னோர்களாகிய வட நாட்டார்கள் கடலையாண்டு வந்தார்கள். அவர்கள் காலங்களில் ஒருவரும் தங்கள் உயிர்களும் பொருள்களும் எந்த நிமிடமும் தங்களுடையவையென்று கருதலாகாது. கடற்கரைக்கு முப்பது நாற்பது மைல்களுக்கப்பாலிருந்தவர்கள் தான் சற்று நிம்மதியாயிருக்கலாகும். ஏன் இந்தத் தட்சிணப் பிரதேசங்களிலிருந்தவர்களெல்லாம் வடக்கு நாட்டாரிடமிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று தங்கள் தெய்வங்களைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் கடற்கரையிலிருந்த எந்தத் துறைமுகமாவது, எந்த இறங்கு துறையாவது, வளை குடாவாவது அவர்களை யெதிர்க்கக் கூடியதாயில்லை. ஆ! அக்காலத்தைப் பார்க்கக்கூடிய அதிஷ்டம் உங்களுக்கிருந்தால்...." என்றான்.

குலசேகரன் மறுபடியவன் தோளைத்தட்டி "பேஷ்! மறுபடி வீரரசம் நிறைந்த மொழிகளே!" என்று அவனைப் புகழ்ந்தான்.

அச்சமயம் தைரியநாதம் பிள்ளையும் கிருஷ்ணப்பனுடைய சங்கீதத்தைக்கேட்டு அங்கு வந்திருந்தார். இவர்கள் சம்பாஷணையையும் அவர் கேட்டுக்கொண்டே யிருந்தாராதலின் கடைசியாகக் கிருஷ்ணப்பன் கூறியதைக் குலசேகரன் சிலாகித்துப் பேசியதைக்கேட்டுச் சகிக்க முடியாமல், "பேஷ்! வீரத்தன்மையான பேச்சா? முழு மூடத்தனமான வார்த்தைகள் என்று கூறுவேன். இப்போது யாருக்கு விரோதமாய்க் கப்பல் ஓட்டிச் செல்வீர்கள்.

எந்தத் துறை முகத்தைத் தாக்கிச் சூறையாடுவீர்கள். இப்போதிருப்பவர்கள் அனைவரும் அரசருடைய சமாதான மான குடிகள். இப்போது உங்கள் கப்பல்கள் வந்து அத்தகைய காரியங்களைச் செய்வதாயின் நீங்களெல்லாம் தூக்கு மரத்திற்குச் செல்ல ஆயத்தமாக விருக்கவேண்டும். ஓ! குலசேகரம் பிள்ளையே! உங்கள் நாட்டாரைப்பற்றி நான் குற்றமாகக் கூறுவதாக நினைக்கவேண்டாம். அவர்கள் சண்டையிடுவதில் திறமைவாய்ந்த வீரர்களாகவே யிருக் கட்டும். ஆனால் அவர்கள் நாட்டின் அத்து இருக்கட்டும். மற்ற நாட்டாரை யவரவர்கள் வரை நிம்மதியாகவிருக்க விட்டுவிட்டிருக்கட்டும். எங்கள் வரையில் கடல், தானே எங்களுக்கு என்ன அளிக்கிறதோ, பூமி எமது கஷ்டத்தை யேற்றுக்கொண்டு அதற்கு ஈடாக என்ன அளிக்கிறதோ அவற்றோடு நாங்கள் திருப்தி படைந்திருப்போம்'' என்றான்.

அச்சமயம் அங்கிருந்த ஒரு முதியோன் கிருஷ்ணப் பனை நோக்கி "யுத்த சமாசாரம் எனக்குத் தெரியும். அது மகா கொடிய செயல்; ஒரு சங்கில் உட்கார்ந்து கடலில் செல்லத் துணிந்தாலும் துணியலாம் யுத்தமுனைக்குமட் டும் செல்லலாகாது'' என்றான்.

கிருஷ்ணப்பன் அத்தீவின் தலைவராகிய தைரியநாதர் கூறியவற்றிற்கு மறுத்துக்கூற அஞ்சியிருந்தாலும், இப் போது யாரோ வயோதிகன் தன் வார்த்தையைத் தாழ்த் திக் கூறுவதற்குச் சும்மாவிருக்க அவன் மனதிற்கு ஒப்ப வில்லை. ஆகையால் ஆத்திரத்தோடு அவ்வயோதிகனை நோக்கி "நீ எந்த யுத்தத்திற்குச் சென்றிருந்தாய்?'' என்று கேட்டான்.

வயோதிகன்:—"ஏன்! மச்சேந்திரன் மலைநாட்டின் மேல் படையெடுத்துச் சென்றபோது நானும் கொண்டு

போகப்பட்டேன். அய்யா ! அக்காட்சியை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். முதலில் நாங்கள் வீரத்தோடு யுத்தம் புரிந்தோம். எதிரிகளை வெட்டியும், சுட்டும், ஈட்டியால் குத்தியும் எங்கும் பிணக்குவியலாக்கி விட்டோம். சற்று நேரத்திற்குள் மலைநாட்டாரின் மூல சைனியம் கடல்போல் பெருகி வந்ததைக் கண்டோம். முதலில் அங்கொரு குண்டு இங்கொரு குண்டாகப் பறந்து வந்தன. பிறகு கல்மழை வருஷிப்பதுபோல் குண்டுமாரி பொழியத் தொடங்கியது. ஐந்து நிமிடங்களுக்குள் முன்னணிகளிலிருந்த வீரர்களெல்லாம் சிட்டுக்குருவிகள் போல் சுட்டு வீழ்த்தப்பட்டனர். பின்னாலிருந்த நாங்களெல்லாம் பின்னுக்குச் செல்லத் தொடங்கினோம். எதிரிகள் நெருங்கி வந்து விட்டார்கள். எங்கள் படைத்தலைவர்கள் எங்களை உறுதியாய் நிற்கும்படி அதட்டிப் பயமுறுத்தினார்கள். நிற்பது மடிவதேயென்று நன்றாய்த்தெரியும்போது எந்த மூடன்தான் நிற்பான். நாங்கள் அதிவேகமாய்ச் சிதறி ஓடிவிட்டோம்...." என்று கூறினான்.

அதுகாறும் எட்டவிருந்து வாய்திறவாமல் கேட்டுக் கொண்டிருந்த மீனாள் அந்த வயோதிகனை நோக்கி, "மச்சேந்திரன் என்னவானான். அச்சுத்தவீரன் எம்மாதிரியிருந்தான்?" என்று கேட்டாள். வயோதிகன் "என்னமா விருந்தானா? ஏன் வேட்டையாட்களால் துரத்தப்படும் சிங்கம்போல் இருந்தான். ஆனால் நான் இருமுறை யவனை திரும்பிப்பார்க்கவில்லை. ஏனெனில் நாங்கள் செல்லவேண்டிய வழி மலையின் அடிவாரத்தை நோக்கிச் செல்லவேண்டியதாயிருந்தது" என்றான்.

மீனுள் "ஆகையால் நீ அவனை விட்டு விட்டு ஓடிவந்து விட்டாய்" என்று வெறுப்போடு கூறினுள்.

**வயோதிகன்:**—அது என் குற்றமல்ல. அங்கு நான் என் பிரியப்படி செல்லவில்லை. அதோடு நான் என்ன செய்வது? மற்றபேரெல்லாம் ஓடிக்கொண்டிருக்கையில் நான் மட்டும் ஏன் நிற்கவேண்டும்.

**மீனுள்:**—"நீ யவன் கூடவே யிருந்து மடிந்திருக்கலாமே" என்ருள்.

**கிருஷ்:**—"ஆம்; அப்போது செத்திருந்தால் நீ செத்தும் சாவாதவனுய்க் கவிகளில் உன் கீர்த்தி பிரகாசித்துக் கொண்டே யிருக்கும்" என்ருன்.

**வயோதிகன்:**—"உங்கள் இருவர்க்கும் நான் வந்தனமளிக்கிறேன். செத்து மண்ணோடு மண்ணுய் நான் போன பின் நீங்கள் என்னைப் பாட்டில் பாடுவதைவிட இப்போது உயிரோடு உங்கள் எதிரிலிருந்து உங்கள் இருவருடைய தேகசுகத்திற்காகவும் இரண்டு கிண்ணங்கள் ஒயின் அருந்துவதே நலம் என்று கருதுகிறேன். அங்கு சண்டையிட்டதும் இடாததும் எல்லாம் ஒன்றே. பாபம் மச்சேந்திரன் எவ்வளவோ சாமார்த்தியங்களெல்லாங் காட்டியும் கடைசியில் அவனைத் தூக்கில் போட்டு விட்டார்கள். ஒரு சாமர்த்தியமும் காட்டாத நானே இதோ இங்கு...." என்ருன்.

அச்சமயம் குலசேகரன் "நீயும் அந்த யுத்தத்தில் மடிந்து உன்னை நரகலோகங் கொண்டுபோய் ஊறுகாய் போட்டு விடாமற் போனுர்கள்" என்ருன். ஏனெனில் அவன் கூறிக்கொண்டிருந்த கதை குலசேகரனுக்குப் பசைபற்றதாகத் தோன்றியது.

தைரியநாதம் பிள்ளை குலசேகரனை நோக்கி "நீ என்ன

தான் கப்பலின் மேல்தட்டில் முன்னணியில் நின்று உன் சாமார்த்தியங்காட்டியிருந்தாலும் பாபம் இந்த வயோதிகரை ஏன் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பே யிறந்து போயிருக்கவேண்டுமென்று கூறுகிறுய். உங்கள் சம்பாஷணை போதும். ஏதோ சென்று வாள் நடனத்தைத் தொடங்குங்கள். நம் நாட்டார் இன்னும் வாள் கவலையை மறந்து விடவில்லையென்றும் நமது வாட்கள் கூர் மழுங்கி விடவில்லையென்றும் யாவர்க்கும் காட்டுவோம்" என்ருள்.

## 22-வது அத்தியாயம்.

அத்தீவார் நடனம் செய்வதில் கையில் வாளேந்தி நடிப்பது ஒருவித நடனமாகும். அதில் ஆடவர் மாதர் இரு பாலாரும் கலந்து கொள்வார்கள். தைரியநாதம்பிள்ளை வாள் நடனம் நடக்கட்டும் என்று கூறியதே, பனிரண்டு வாள்கள் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டன. அவைகள் தம் உறைகளை விட்டு வெளிவந்து நெடுங்காலம் ஆய்விட்டபடியால் அக்கத்திகள் துருப்பிடித்து நீல நிறமடைந்திருந்தன. அந்த நடனத்தில் ஆறு ஆடவரும் ஆறுமாதர்களும் ஜதையாய் நடிக்கத் தொடங்கிஞர்கள்.

அந்த நடனத்தில் மீனுள் பெண்பாலர்க்குத் தலைமை வகித்திருந்தாள். ஆரம்பத்தில் அந்த நடனம் பார்ப்பதற்கு மிக்க நேர்த்தியாகவிருந்தது. கிருஷ்ணப்பன் அந்த நடனத்திற்குத் தக்கபடி யுத்த சங்கீதம் வாசித்தான். அதற்குத் தக்கபடி அவர்கள் உற்சாகத்தோடு நடிக்கத் தொடங்கிய போது பார்ப்போருக்கு அச்சமாகவிருந்தது. ஏனெனில் அச்சமயம் பார்ப்பதற்கு அவர்கள் உண்மையாகவே யுத்தம் செய்வதுபோல் தோன்றியது. நடனம் முடிந்ததும் யாவரும் சற்று நின்ருர்கள். அச்சமயம் மீனுளைச் சுற்றி

மற்றபேர் நின்றிருந்தது ஓர் இராணியைச் சூழ்ந்து அவளுடைய பரிவாரங்கள் நின்றதுபோ லிருந்தது.

பிறகு அவர்கள் கலைந்து செல்ல முயன்றபோது குலசேகரன் மீனுளை யழைத்துச்சென்றான். அப்போது அவன் மீனுள் செவியில் என்னமோ குசுகுசுவென்று கூறியதை முருகப்பன் கவனித்தான். "அடடா! இப்புது மனிதன் மேல் இவள் காதல் கொண்டிருக்கிறுளோ?" என்று சிந்தித்தான். அப்படியிருந்தாலும் இவனுக்கென்னகவை. முன்பு அக்கன்னியரிடம் சினேகபாவம் கொண்டிருந்ததே யதற்குக் காரணம். வாள் நடனம் முடிந்ததும் சங்கீதம் முதலிய பல விஷயங்களில் காலங் கழிக்கப்பட்டது. வேளை அர்த்தராத்திரி ஆயிற்று. அச்சமயம் புதிதாக யாரோ விருந்தாளிகள் வந்து கதவைத் தட்டினுர்கள்.

அவ்வாறு வருகிறவர்களையும் விருந்தில் சேர்த்துக் கொள்வதே அத்தீவிலுள்ளவர்கள் ஆசாரம். ஆகையால் உடனே கதவு திறக்கப்பட்டது. இப்போது வந்தவர்கள் கடல் தேவர்கள்போலவும் தேவதைகள்போலவும் வேடமணிந்து வந்தார்கள். பைரவி கிருஷ்ணப்பனே அத்தகைய வேடங்களைப்பற்றி ஏற்பாடு செய்தவன். அந்த வேடத்திற்குத்தக்கபடி அதில் ஆண் வேடக்காரர்களனை வரும் மீன் வேட்டையாடும் பாலர்களும் பொய்ச்சிகை தாடிகளும் கடலினுள்ள சிப்பிகளால் கோக்கப்பட்ட மாலைகளும் அணிந்திருந்தார்கள். நீலநிறம் பச்சை நிறம் பொருந்திய உடைகளும் அணிந்திருந்தார்கள். அதோடு அவர்களில் சிலர் சங்கு வைத்துக்கொண்டு இடையிடையில் ஊதினுர்கள். பெண்வேடமணிந்திருந்தவர்கள் நீலநிறம் பச்சைநிறம் பொருந்திய விலையுயர்ந்த பட்டுடைகளையணிந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் கரங்களிலும் கழுத்திலும் புயங்களிலும் சங்கு மணிகளாகிய மாலைகளையணிந்

திருந்தார்கள். ஆனால் சிலர் மெய்யான முத்துமாலை யணிந்திருந்தார்கள். அங்கு விருந்திற்கு வந்திருந்தவர்களில் சிலரே இரகசியமாய் வெளியிற் சென்று அம்மாதிரி வேடமணிந்து வந்தார்கள் என்று பின்னால் தெரியவந்தது. அவர்களில் ஆண் வேடந் தரித்தவர்களும் பெண்வேடந் தரித்தவர்களும் மாறி மாறிப் பாடினார்கள். கடைசிபாட்டு எல்லோராலும் பாடப்பட்டது. அவர்களனைவரும் முகமூடியணிந்திருந்தார்கள்.

முருகப்பனுடைய நாட்டம் அவர்கள் நடனத்திலாவது சங்கீதத்திலாவது இல்லை. ஏனெனில் வேடமணிந்திருந்த பெண்களில் ஒருத்தி அவன் தோளைத் தொட்டுக் கண்களால் சமிக்கை செய்தாளாதலின் அவள் ஏதோ சங்கதி கூறப்போகிறாளென்று அவன் அவள் மேலேயே கண் வைத்திருந்தான். அப்பெண் மற்றப் பெண்களைவிட மிக்க ஜாக்கிரதையாய்த் தன் உருவத்தை மறைத்துக்கொண்டிருந்தாள். பட்டு முகமூடி யணிந்திருந்தாள்.

வரவர அப்பெண் காற்றுக்காக இடம்விட்டுப் பெயர்கிறவள்போல் மெதுவாய் நகர்ந்து நகர்ந்து திறந்திருந்த ஒரு அறையின் கதவருகிற் சென்று நின்று முருகப்பனை யுற்று நோக்கினாள். இதையும் முருகப்பன் கவனித்துக் கொண்டேயிருந்தான். கடைசியில் அப்பெண் ஒருவரும் தன்னைக் கவனிக்காத சமயம் பார்த்து அறையைவிட்டு நழுவிவிட்டாள். முருகப்பன் சற்றும் தடுமாற்றமின்றி அவளைப் பின் தொடர்ந்தான். அப்பெண் சற்றுதூரம் சென்றபின் தான் திரும்பும் திக்கை முருகப்பன் பார்ப்பதற்காகச் சற்று நின்று பிறகு நடந்தாள். அவள் துரிதமாகக் கடற்கரையை நோக்கி நடந்தாள். பொழுதும் விடியும் காலமாய்விட்டது.

முருகப்பன் கஷ்டமில்லாமலே அவளைப் பார்வையில் வைத்துக்கொண்டே சென்றான். அப்பெண் மேடு பள்ளங்களைக் கடந்து பாறைகளுக்கிடையிலுள்ள சந்தின் வழியாக அங்கிருந்த ஒரு இடத்தருகிற் சென்றாள். அங்கு ஒரு ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. முன்பு முருகப்பன் ஸ்ரீதரியநாதம் பிள்ளையின் குடும்பத்தில் நட்பாகவிருந்தபோது சிரத்தையோடு அவ்வாசனத்தை யமைப்பதில் உதவி செய்தான். அங்கு சமையம் நேரும்போதெல்லாம் மீனாளும் அவள் சகோதரியும் நெடுநேரம் தங்கியிருப்பதுண்டு. அந்த ஆசனத்தில் அப்பெண் உட்கார்ந்தாள். முருகப்பன் முதலில் அந்த ஆள் நாகம்மாளாக விருக்குமோ வென எண்ணினான். நாகம்மாள் சற்று உயரமானவள். மேலும் அவளுடைய நிதானமும் கம்பீரமுமான நடைக்கும் இப்பெண்ணின் நடைக்கும் மிக்க வித்தியாசமிருந்தது. இவ்வுருவம் நாகம்மாளாக வில்லாதவரையில் இவள் புனிதவதியாகவே யிருக்கவேண்டும் என்றெண்ணினான். அப்பெண் அந்த ஆசனத்திலுட்கார்ந்து தன் முகமூடியைக் களைந்தபோது அவள் புனிதவதிதானென்று தெரிந்தது. முருகப்பன் அவளிடம் அச்சங்கொள்ளுமாறு ஒரு காரியமும் செய்யவில்லை. ஆயினும் வாலிபகால வியற்கைப்படி இருவர் மனதிலும் கலக்கமுண்டாகியே யிருந்தது. ஆனால் புனிதவதிதானே அவனைச் சந்திக்க வந்ததாலும் தங்கள் சம்பாஷணை சீக்கிரம் முடிக்கப்படவேண்டுமாதலாலும் தானே முதலில் பேசத் தொடங்க வேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொண்டாள்.

அவள் முருகப்பனை நோக்கித் தடுமாற்றத்தோடு, "நான் இம்மாதிரி அபூர்வமான விதமாய் நடப்பதற்காக நீ மிக்க வியப்படைவாய்" என்றாள்.

முருகப்பன்:—இன்று காலை வரையில் நீயாவது உன்

தமக்கையாவது என்னிடம் நட்பு காட்டுவதால் எனக்கு வியப்புண்டாகியே யிராது. இப்போது நீ என்னிடம் சம்பாஷிக்க விரும்பியதைவிட நீங்களிருவரும் எவ்விதக் காரணமுமின்றி என் நட்பை வெறுத்துவிட்டது தான் எனக்குச் சொல்லொணுத வியப்பாக விருக்கிறது.

ஓ! புனிதவதி! எந்த விஷயத்தில் நான் உங்களுக்குக் கோபமுண்டாகச் செய்தேன் என்பதைக் கடவுளறியக் கூறவேண்டும். நமக்குள் இம்மனத்தாபம் ஏன் உண்டாக வேண்டும்?'' என்று கேட்டான்.

புனிதவதி:—“அது எங்கள் தந்தையின் விருப்பம் என்று கூறினுல் அது போதாதா?'' என்று தலை குனிந்தபடி கூறினுள்.

முருகப்பன்:—“இல்லை. அது போதாது. ஏனெனில் உங்கள் தந்தை ஏதோ முற்றும் தவருன மயக்கில் சிக்கினுலன்றி இப்படித் தீடலென்று என்னைப்பற்றி மாருன அபிப்பிராயமும் நடக்கையும் கொண்டிருக்க முடியாது. அது எத்தகைய விஷயம் என்பதைக் கூறும்படிக்கே உன்னை வேண்டிக்கொள்கிறேன். அவருக்குண்டான இம்மாறுதலுக்குக் காரணம் ஏதோ ஒரு பெரிய மோசமாக இருக்கிறதென்று நான் காட்டாவிடின் ஒரு நாயினும் இழிந்தவனுவேன். அப்படி வேணுமென்றே செய்த பெரிய மோசமாயில்லாவிடின் முற்றும் தவருன அபிப்பிராயமாகவாவதிருக்கவேண்டும்'' என்ருன்.

புனிதவதி:—“அது அப்படியே யிருக்கலாகும். அப்படித்தான் இருக்கிறதென்றே நம்புகிறேன். நான் அப்படித்தான் எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன் என்பதற்கு நான் உன்னை யிங்கு சந்திக்க வந்ததே போது

மான அத்தாட்சி. என் தந்தையின் காரணத்தை நான் உனக்குக் கூறுவது முடியாத காரியம். நாகம்மாள் அதைப்பற்றித் தைரியமாகவே என் தந்தையிடம் பேசினுள். ஆனல் அவர்கள் மனவருத்தத்தோடு பிரிந்து விட்டார்கள் என்று பயப்படுகிறேன். அப்படி நேரிடச்செய்தது அற்பமான காரியமாகவிராது'' என்ருள்.

முருகப்பன்:—"உங்கள் தந்தை நாகம்மாளின் ஆலோசனையைக் கவனிப்பதில்லையென்பதை நான் கவனித்திருக்கிறேன்'' என்ருன்.

புனிதம்:—"அவர்கள் தூர சுற்றத்தார்கள் - இளமையில் இருவரும் சினேகமாக விருந்தார்கள். ஒரு காலத்தில் அவர்கள் மணம்புரிந்து கொள்வார்கள் என்று கருதப்பட்டிருந்ததாகக் கேள்விப்படுகிறேன். ஆனல் அவள் தந்தை யிறந்ததே நாகம்மாளின் அபூர்வ குணங்கள் வெளியாகத் தொடங்கின. அதோடு அக் கலியாண விஷயம் கைவிடப்பட்டது போல் காண்கிறது.

ஆனல் என் தந்தைக்கு அவள் விஷயத்தில் விருப்பம் இருக்கிறது. உன் விவகாரத்தைப்பற்றிப் பேசியதில் இருவரும் சச்சரவிட்டுக் கொண்டார்கள். இதனல் அவருக்கு அந்த விஷயத்தில் எவ்வளவோ தவருன அபிப்பிராயம் அவர் மனதில் வேரூன்றி யிருக்கவேண்டுமென்று தெரிகிறது'' என்ருள்.

முருகப்பன்:—"தவருன அபிப்பிராயம் என்று கூறியதற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். கடவுள் உனக்கு நல்லாசியருள்வார். நீ எப்போதுமே கனிந்த உள்ளமுடையவள். கடின மனதிருப்பது

போல் அபிநயம் செய்யக்கூட உன்னால் முடியாது" என்றான்.

புனிதம்:—நான் உண்மையாகவே கூறுகிறேன். நீ என்னைப்பற்றியாவது என் தமக்கையைப்பற்றியாவது கெட்ட வார்த்தைகளை எப்போதேனும் கூறியிருப்பாய் என்று நான் நம்பவேமாட்டேன்.

முருகப்பன்:—"நான் அப்படிக் கூறினதாக யார் சொன்னது? அத்தகைய துணிகரமாய் யார் என்மேல் அப்படிப்பட்ட அபாண்டம் கூறினது? அவர்கள் நாக்கைத்தோண்டிக் கழுகுக்கன்றோ இரையாக்குவேன்" என்று ஆத்திரத்தோடு கூறினான்.

புனிதம்:—ஓ ஓ! உனக்குண்டாகும் கோபத்தைக் காண எனக்குப் பீதியுண்டாகிறது. நான் உன்னை விட்டுச் சென்றுவிடுவேன்.

முருகப்பன்:—அப்படி என்மேல் அபாண்டங்கூறி என் நண்பர்கள் என்னை வெறுக்கும்படிச் செய்த சண்டாளர் யாரென்று எனக்கறிவிக்காமலே போய் விடுகிறாயா ?

புனிதம்:—ஓ! அவர்கள் ஒருவரல்ல. நான் அவர்களைக் கூற முடியாது. ஆனால் என் தந்தைக்கு அத்தகைய அபிப்பிராயத்தை யுண்டாக்கியவர்கள் ஒருவரல்ல.

முருகப்பன்:—அவர்கள் நூறு பேராக விருக்கட்டும். அத்தகைய அபாண்டம் கூறியவர்கள். நான் உலகில் யாவரை விடவும் கௌரவமாய் மதித்திருந்த நண்பரை நான் இழிவுபடுத்திப் பேசியதாகக் கூறியவர்கள் யாராக விருந்தாலும் நான் கூறியபடி செய்வேன். நான் இதே நிமிடம் உன் தந்தையிடம் சென்று யாவர் முன்னும் இதைக் கூறும்படி கேட்கிறேன்.

புனிதம்:—அய்யோ கடவுளே! நீ போகவேண்டாம். எனக்

குச் சொல்லொணுத சகிக்கொணு வியாகூலத்தை யுண்டாக்கலாகாதென்று எண்ணமிருந்தால் அங்கு செல்லவேண்டாம்.

**முருகப்பன்:**—அப்படியாயின் கூறு. இக்குலசேகரன் அவர்களில் ஒருவனு? நீ என்னை யென்ன செய்ய வேண்டுமென்கிருய்? நீ எதைக் கூறினும் நான் தடையே கூறேன் என்பதை மட்டும் பூரணமாக நம்பு.

**புனிதம்:**—"சரி-அப்படியாயின்....அந்தக் குலசேகரன்..... குலசேகரன்...." என்றதே,

முருகப்பன் மிக்க ஆத்திரங்கொண்டு, "ஆ! அந்தப் பயல்-எனக்குத் தெரியும். ஒரு வழியில்லாவிட்டால் மற்ருெரு வழியிலாவது, அந்தத் திருட்டுப்பயலே இக்கலகத்திற்கெல்லாம் மூலகாரணம்" என்ருன்.

**புனிதம்:**—நீ சற்று நேரம், நான் சங்கதியைக் கூறுமட்டும் பொறுமையாயிராவிட்டால் நான் பேசாமல் எழுந்து போய்விடுவேன். நான் கூறப்போவது உன்னைப் பற்றியல்ல. இன்னொருவரைப் பற்றியது. ஒரே வார்த்தையாய்க் கூறுகிறேன். என் தமக்கை மீனுள். அவள் உன்மேல் வெறுப்படைந்திருப்பதைப்பற்றி யல்ல நான் கூறுவது. அவன் அவள் விஷயத்தில் கவனம் வைத்திருப்பதைப்பற்றியே கூறுகிறேன்.

**முருகப்பன்:**—ஆம் - அது பார்ப்பவர்களுக்கு நன்ருகப் புலப்படுகிறது-தெரிகிறது. அதை மீனுள் அன்போடு ஏற்றுக்கொள்கிருளென்றே எனக்குத் தோன்றுகிறது.

**புனிதம்:**—அதே காரணத்திற்காகத்தான் நான் பயப்படுவது. அம்மனிதனுடைய வெளித்தோற்றமும், களங்க

மற்ற நடைகளும், அதிசயமான சம்பாஷணையும் எனக்குக் கூட ஒருவிதமாகத் தோன்றின.

முருகப்பன்:—பார்வைக்கு அவன் நல்ல உருவமுடையவனென்பது நிச்சயமே. அவன் நடவடிக்கைகளால் அவன் ஒரு சிறிய கப்பலுக்குக் கப்பித்தானாகவிருந்திருக்கலாம் என்பது தெரிகிறது. ஆனால் சம்பாஷணையால் தன் பெருமையைத் தானே பறையறைபவன் என்பது காணப்படுகிறது. ஏனெனில் அவன் பேச்சு முழுமையும் அவன் செய்த சாமார்த்தியமான காரியங்களைப் பற்றியதாகவே யிருக்கிறது.

புனிதம்:—நீ கூறுவது தவறு. அவன் அறிந்தவைகளையும் பார்த்தவைகளையும் பற்றி நன்றாய்க் கூறுகிறான். இஃதன்றி அவன் அநேக தூரதேசங்களிலும் அநேகம் வீரத்தனமான யுத்தங்களிலும் இருந்திருக்கிறான். அவற்றை யெல்லாம் பற்றி மிக்க அடக்கமாய்க் கூறுகிறவன் போலவே மொழிகிறான். அவன் கூறும் போது கேட்டால் பிரத்தியட்ச யுத்தத்தைப் பார்ப்பது போலவும் பீரங்கிகளின் சத்தத்தைக் கேட்பது போலவுமே தோன்றும். அது மட்டுமல்ல; அவன் வேறு விஷயங்களைப் பற்றியும் பேசுகிறான். அன்னிய நாடுகளில் உற்பத்தியாகும் பழம் முதலியவற்றைப் பற்றியும், அங்குள்ள ஜனங்களின் உடை உணவு முதலிய விஷயங்களைப்பற்றியும் கூட சம்பாஷிக்கிறான்.

முரு:—ஓகோ வாலிப கன்னிகைகளுக்குப் பிரியமுண்டாகும்படி பேசக் கற்றுக்கொண் டிருக்கிறான்.

புனி:—ஆம்; கற்றுக்கொண்டிருக்கிறான். நான் நிச்சயமாகக் கூறுகிறேன். ஆரம்பத்தில் நான் மீனாவிட அதிக

[library stamp]

மாகவே அவனை விரும்பினேன். அப்படியிருந்தும், மீனாள் என்னிலும் அதிக கெட்டிக்காரியாயினும், நான் அவளைவிட உலக அனுபவம் அதிகமாகவுடையவள். ஏனெனில் நான் அனேக நகரங்களைக் கண்டு அனேகம் ஆடவரைப் பார்த்திருப்பதால் நான் சுலபமாய் ஏமாற்றமடையேன்.

முரு:—"ஏன் புனிதம்! அப்படிப்பட்டவன் விஷயத்தில் உனக்கிருந்த அபிப்பிராயம் ஏன் குறைந்து போயிற்று?" என்றான்.

புனி:—சற்று சிந்தித்தபின் "ஏனெனில், அவன் முதலில் மிக்க உற்சாகமுடையவனாயிருந்தான். அவன் கூறிய கதைகள் பயங்கரமாகவாவது துக்கமாகவாவதில்லை. அவன் அதிகமாக நகைத்துக்கொண்டும் நடித்துக் கொண்டுமிருந்தான்" என்றாள்.

முரு:—அப்படியாயின் அப்போது அவன் அதிகமாய் உன்னோடேயே நடனமாடிக்கொண்டிருந்தானாக்கும்.

புனி:—இல்லை. அவன் எங்களிருவரிடமும் ஒரே மாதிரியாய் நடந்துகொண்டிருந்தபோது எனக்கு எவ்விதச் சந்தேகமும் கொஞ்சமேனுமில்லை. ஏனெனில் அப்போதவன் சினேகனாகமட்டுமே யிருந்திருப்பான்.

முரு:—அப்படியிருக்கையில் அவன் உன் தமக்கையோடு அறிமுகமாயிருப்பதையேன் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கலாகாது? அவன் செல்வவந்தனாக விருக்கிறான். இனிமையாய்ச் சம்பாஷிக்கிறானென்று நீ கூறுகிறாய். இதைவிட உன் தமக்கையைக் காதலிப்பவனுக்கு இன்னும் அதிகமான யோக்கியதை யென்ன வேண்டுமென்று கருதுகிறாய்?

புனி:—நாங்கள் யாரென்பதை நீ மறந்துவிட்டாய். இந்தத் தீவு ஒரு சிறு உலகம். உலகிலுள்ள மற்ற விடங்களை

விட இது நீர்வளம் நிலவளத்தில் குறைந்ததென்று மற்றவர்கள் கூறுவது போலவே யிருந்தாலும் இது வரையில் இது ஒரு உலகமே. இது எங்கள் தந்தைக்குச் சொந்தமானதாகையால் இங்கு நாங்கள் முதன்மையான அந்தஸ்தை யடைந்திருக்கிறோம். நாங்கள் கடலகர்கள் வமிசத்தில் பிறந்தவர்கள். இங்கு கடலகர் என்றால் கடலில் கொள்ளை யடிப்பவர்களே யன்றி வேறல்ல. அக்காலத்தில் மேற்குக் கண்டத்தின் வட பாகங்களிலிருந்தவர்கள் கடற்கொள்ளையில் கைதேர்ந்தவர்கள். கப்பல்களைக் கொள்ளையடிப்பதும் துறைமுக நகரங்களைச் சூறையாடிப்பிடித்துக் கொள்வதுமே யவர்கள் தொழில். அம்மாதிரியே வரவரச் சில இராஜாங்கங்களே யேற்படுத்தப் படலாயின. மேல் நாட்டுச் சரித்திரங்களில் இதை விவரமாகக் காணலாம். அப்படிப்பட்டவர்கள் திடீலென்று எங்கோவிருந்து எங்கள் தீவில் வந்து முளைத்த ஒரு புதுமனிதன்மேல் எங்கள் காதலை யளித்து விடுவது எங்களுக்கு யுக்தமான நடக்கையாகுமென்று நீ கருதுகிறாயா? அதிலும் எங்கிருந்து வந்தான் எங்கு செல்கிறான் என்று தெரியாத ஒருவன்மேல் அன்பு வைப்பது எப்படி ஒழுங்காகும்?

முரு:—அத்தகைய மனிதன் இத்தீவின் கன்னிகைகளில் அழகிய ஒருத்தியை மயக்கிவிடக் கூடியவனா யிருக்கிறான்.

புனி:—“இந்த விஷயத்தில் அற்பமான அபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். மீனாள் என்னைப் போலவே என் தந்தையின் புத்திரி. எங்கள் தந்தை ஏழைகளின் நண்பர். அனாதரவாய் வருகிறவர்களை யாதரிப்பவர். ஆனால் அதனாலேயே அப்படிப்பட்ட

வர்களில் எத்தகைய பெருமையுடையோரும் எங்களோடு சம்பந்தம்செய்து கொள்ளலாமென்று சுலபமாய்க்கருதி விடலாகாது—" என்று ஒருவித ஆத்திரத்தோடு கூறியபின் முருகப்பனை நோக்கிச் சற்று சாந்தமாக,

"இல்லையில்லை. மீனாள் அந்தக் குலசேகரனைக் கலியாணஞ்செய்துகொள்ள எண்ணக்கூடிய அவ்வளவு இழிவான நடக்கைக்கு இணங்குவாளென்று நீ கருதவேண்டாம். ஆனால் அவள் தன் எதிர்கால க்ஷேமத்தைக் கெடுத்துக் கொள்ளும் விதமாய் வேண்டுமாயின் அவன் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்திருக்கலாகும். அவள் முகத்தில் தோன்றிய் குறிகளால் அவள் மனதில் ஏதோ ஒருவித நம்பிக்கையிருப்பதாகவும், ஆனால் அதே காலத்தில் அவள் மனதில் ஒருவித ஏக்கமிருப்பதாகவும் எனக்குப் புலப்படுகிறது. அவள் மனதில் எத்தகைய நம்பிக்கையான அன்பும் சுலபமாக வேரூன்றிவிடும். இக்காரணங்களால் எனக்கு அவள் விஷயத்தில் மிக்க பீதியுண்டாயிருக்கிறதென்பதைப்பற்றி நீ அதிசயப்படவேண்டிய காரணமேயில்லை" என்றாள்.

புனிதம் அவ்வாறு கூறும்போது வெளிச்சம் கொஞ்சமாகவிருந்தாலும் அந்த வெளிச்சத்திலும் அவள் மனதில் மிக்க துயர மிருக்கிறதென்றும், தன் தமக்கை மூடத்தனமாய் அந்தக் குலசேகரனுடைய மயக்கில் சிக்கி அழியப்போகிறாளென்று அவள் துயரமடைந்திருக்கிறாளென்றும் அவள் கண்களில் நீர் வடிகிறதென்றும் முருகப்பன் அறிந்துகொண்டான்.

அதன்மேல் அவன் அவளை நோக்கி, "புனிதம்! உனக்கு உன் தமக்கையின் மேலிருக்கும் பரிசுத்த அன்பினால் இப்போது அவள் விஷயத்தில் உண்டாயிருக்கும்

மனக்கலக்கம் எத்தகையதென்பதை நான் நன்ருக அறி கிறேன். உன் துயரத்தில் நானும் ஒரு பாகத்தை யடைகி றேன். ஆனல் இவ்விஷயத்தில் நான் உனக்கு எவ்விதமான உதவி செய்யக்கூடும் என்பதைப்பற்றி மட்டும் நீ கூறினல், அவ்வழியில் என் பிராணனையே தியாகம் செய்யவேண்டி யிருந்தாலும் நான் அஞ்சாமல் அதைச் செய்வேன். இச் சந்தர்ப்பத்தில் ஒன்றுமட்டும் உனக்குக்கூற விரும்புகி றேன். அதாவது, நான் உன்னைப்பற்றியேனும் உன் தமக்கை அல்லது உன் தந்தையைப் பற்றியேனும் எள்ளள வாவது அகௌரவமான மொழிகளைக் கூறியதாக யாரே னும் கூறியிருந்தால் அவர்கள் வேண்டுமென்றே பெரிய அபாண்டமான பொய்யைக் கூறிய சண்டாளர்களாக வேண்டும் என்று நான் கடவுளறியக் கூறுகிறேன்" என்ருன்.

புனிதம் அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு "நான் நீ கூறுவதை நம்புகிறேன். அது உண்மையாகவே பூரணமாய் நண்பரிடம் எனக்கு நம்பிக்கையை யுண்டாக்கி விட்டதால் என் மனதில் பாரம் குறைந்து இலேசாய் விட்டதுபோல் தெரிகிறது. நீ இவ்விஷயத்தில் எப்படி எங்களுக்கு உதவி செய்வாயென்பது எனக்கு விளங்கவில்லை. இப்போது நான் இச்சங்கதியையுன்னிடம் கூறியது நாகம்மாளின் ஆலோசனை, என் கட்டளைப்படிக்கே என்று கூறுவேன். அவள் கட்டளைப்படிக்கே நான் நடந்தது எனக்கென்ன மோ வியப்பாகவேயிருக்கிறது. இப்போது என் தமக்கை சிக்கிக்கொண் டிருக்கும் ஆபத்தைப்பற்றி நான் எவ்வளவு கூறக்கூடுமென்பது உனக்குத் தெரிந்தே யிருக்கிறது. அந்தக் குலசேகரன் விஷயத்தைக்கவனி. பத்திரம் அவ னேடு சண்டையிட்டுக்கொள்ளாதே. அவன் பழகிய போர்

வீரன். அவனோடு சண்டையிட்டால் உனக்குத் தான் துன்பம் நேரிடும்'' என்றாள்.

வாலிபன் "நீ கூறுகிறபடியே நடக்க முடியும் என்று எப்படி அவ்வளவு நிச்சயமாய்க் கூறலாகும். ஆனால் ஒன்று மட்டும் எனக்குத்தெரியும். அதாவது, பகவான் கொடுத்த கால்களும் கைகளும் புத்தியும் எனக்கிருக்கிற வரையில், என் பக்ஷத்தில் நியாயமும் நிரபராதத் தன்மையும் இருக்கிற வரையில், அந்தக் குலசேகரன் என்மேல் தொடுக்கும் எச்சண்டைக்கும் நான் அஞ்சமாட்டேன்'' என்று உறுதியாய்க் கூறினான்.

அவன் கூறும்போது அவன் முகத்தையுற்றுநோக்கிக் கொண்டிருந்த புனிதம் கடைசியில் அவனை நோக்கி "அப்படியாயின் உனக்காக அல்லாவிடின் என் தமக்கைக்காக, எனக்காக, என் தந்தைக்காக, அவனோடு எத்தகைய சச்சரவும் வைத்துக்கொள்ளாதே. ஆனால் அவன்மேல் கண்வை. அவன் உண்மையில் யார் என்பதையும் எங்கள் விஷயத்தில் அவன் எண்ண மென்ன வென்பதையும் கண்டறி. உன்னால் கூடுமானால் அப்படிச்செய். அவன் தன்னோடுகூட வந்த மாதைப்பற்றி விசாரிக்க ஆரல் தீவுக்குச் செல்வதாகக் கூறினான். அப்படிக் கூறிக்கொண்டே யிருக்கிறானன்றி, நாட்கள் கழிந்து பிறகு வாரக்கணக்கில் காலம் கழிந்துகொண் டிருந்தும் அவன் போனபாடில்லை. அவன் என் தந்தையோடு சாராயங் குடித்துக்கொண்டே கதை சொல்கிறான். அவன் சென்ற அன்னியநாடுகளிலுள்ள அதிசயங்களைப் பற்றியும் அவன் செய்த அற்புதமான காரியங்களைப்பற்றியும், அன்னிய நாடுகளிலுள்ள அதிசயமான மனிதர்களைப்பற்றியும் கூறுகிறான். தினம் இப்படியே நடந்து கொண்டிருப்பதால் யார் எந்தவூர் எப்படிப்பட்டவன் என்று தெரியாத அப் புதுமனிதன் எங்

கள் குடும்பத்திற்கு வரவர மிக்க நெருக்கமுள்ளவனுகி விட்டான். அவனைப்பற்றிய உண்மை தெரியாதிருக்கிற வரையில் இந்த விஷயமே யென் மனதிற்கு மிக்க கலக்கத்தை யளித்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் செடி மறைவில் ஒரு ஜெந்து இருக்கிறது. அது மான் என்று நாம் எண்ணியிருக்கிறோம். கடைசியில் அது அதிகமாய் நம்மிடம் நெருங்கிய பின் மான் தோல் போர்த்த புலியாகவிருந்து விட்டால் பிறகு தப்ப முடியாதல்லவா? இனி நீ விடை பெற்றுக் கொள்ளலாம். நாகம்மாள் என் தந்தைக்கு உன் மேலிருக்கும் வெறுப்பை யெவ்வாற்ருனும் மாற்றி விடுவதாக உறுதியாய்க் கூறுகிருள். ஆகையால் என் தந்தையும் மீனுளும் உன்னிடம் எவ்வளவு வெறுப்பாக நடந்துகொண்டாலும் நாளைக்கு நீ வசந்தமாளிகையை விட்டுப் போகலாகாது என்று கூறுகிருள். இது அவளுடைய கட்டளை. அதை யெவரும் மீறி நடக்கலாகாது. ஆகையால் நீயவள் கட்டளைப்படியே நடந்து கொள்வதுதான் நலம். இன்னெரு விஷயம் கூறுகிறேன். அதாவது அவர்களெதிரில் நானும் உன்னிடம் வெறுப்பான விருந்தாளியிடம் நடந்து கொள்வதுபோலவே நடந்துகொள்வேன். ஆனல் உள்ளத்தில் நான் பழைய புனிதவதியே; நீ பழைய முருகப்பனே; இனி நான் சீக்கிரம் போய்விடவேண்டும்; நாம் தனியே காணப்படலாகாது" என்ருள்.

அதன்பிறகு அவளும் முருகப்பனும் அவர்கள் ஆசாரப்படி கரங்களைப் பற்றிக் குலுக்கிக்கொண்டார்கள். புனிதத்தை விட்டுப் பிரிய வாலிபனுக்கு மனம் வரவில்லை. தன் நட்பை வெறுத்து விட்டவர்கள் என்று தான் கருதியவர்களில் ஒருத்தி தன்மேல் அந்தரங்கமாய் விசுவாசம் வைத்திருக்கிருள் என்பதை யறிந்தபோது அவள் மேல் அவனுக்கு ஒருவிதமான புது அன்பு ஜனித்து விட்டபடி

யால் அவள் கூடவிருப்பது அவன் மனதிற்கு ஆனந்தத்தை யளித்தது. ஆயினும் புனிதம் தான் செல்லவேண்டிய வழிக்கு மாறுகவிருந்த ஒருவழியை யவனுக்குக் காட்டி விட்டுத் தான் துரிதமாய் வீட்டை நோக்கி நடந்தாள்.

---

## 23-வது அத்தியாயம்.

புனிதம் தன் கண்களுக்கு மறையுமட்டும் முருகப்பன் அதே யிடத்தில் நின்று அவளைநோக்கிக் கொண் டிருந்தான். இப்போது அவள் விஷயத்தில் அவன் மனதி லுண்டாகியிருக்கும் உணர்ச்சி இதுவரையில் ஒருபோதும் உண்டாயிருந்ததல்ல. ஒருவன் சாதாரண சினேகிதத்திற் கும் காதலுக்கும் இடையிலுள்ள உணர்ச்சியோடு ஒரு மாதிடம் பழகிக்கொண் டிருப்பதில் ஆபத்தில்லை. ஆனல் அதே நிலைமை நீடித்திருப்பது கஷ்டமே. கொஞ்சம் தவ றினல் அது காதலாக மாறிவிடும். இனி முருகப்பனுடைய மனம் அந்நிலைமையை யடைந்ததென்றே கருதப்படவேண் டும். ஆனல் அச்சமயம் அவன் அதை யுணரவில்லை யென்றே கூறலாம்.

இக்காரணம் பற்றியே மணமாகு முன் கன்னிகைகள் அன்னிய வாலிபப் புருடரோடு சம்பாஷிக்கலாகாது, அவர்கள் எதிரில் வரலுமாகாது என்று நம்முன்னேர்க ளாகிய அறிவாளிகள் விதியேற்படுத்தி யிருந்தார்கள். அவர்கள் முதலில் ஆரம்பித்த சாதாரண அறிமுகம் வர வரச் சினேகமாய் மாறிக் கடைசியில் காதலாய் முளைத்து வேரூன்றிவிடும். அக்காலத்தில் உலக அனுபவமறியாத வாலிபர்களாகிய அவர்கள் மனதிற்கு அக்காதலின் கவர்ச்சிமட்டுமே புலப்படுமன்றிப் பரஸ்பரயோக்கியதை யாவது, தங்கள் சேர்க்கையால் பிற்காலத்தில் நேரக்கூடிய

சுக துக்கங்கள் நன்மை தீமைகள் முதலியவற்றைப் பற்றிய உணர்ச்சியாவது சற்றும் உண்டாவதில்லை. இதனால் அத்தகையோர் பெரும்பாலும் பின்னால் மிக்க துன்பங்களுக்குள்ளாகிறார்கள்.

முருகப்பன் சிந்தித்துக்கொண்டே கடைசியில் வசந்த மாளிகைபோய்ச் சேர்ந்தான். இவன் வெளியில் சென்றிருந்ததை அங்கிருந்தவர்களில் ஒருவரும் கவனிக்கவில்லை.

முருகப்பன் வீட்டிற்குள் நுழையும்போது பைரவி கிருஷ்ணப்பன் சந்திரனைப்பற்றிப் புகழ்ச்சியாய்ப் பாடிக்கொண்டிருந்தான். முருகப்பன் அங்கு சென்று உட்கார்ந்ததும் கிருஷ்ணப்பன் அவனை நோக்கி "ஆ வாலிபனே! விருந்துக் கேளிக்கையில் கிழவனை மறந்துவிட்டாய்போலும்; அதோ கிழக்கில் வானம் வெளுத்துவிட்டது: ஆதித்தன் தன் ஆயிரம் கிரணங்களையும் வீசிக்கொண்டு புறப்படப்போகிறான். ஆனால் அவன் நமது குளிர்ச்சி பொருந்திய சந்திரனுக்கு ஒப்பாக மாட்டான். சூரியன் நெற்றிநீர் இற்று விழ உழைக்கும் கஷ்டவாளிகளுக்கெல்லாம் ஒரு தீபம் போன்றவன் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆனால் அவன் மனிதர்க்கு உழைப்பையும் ஆயாசத்தையுமே யளிக்கிறான். சந்திரனோ அப்படியல்ல. எப்போதும் குளிர்ச்சியான பிரகாசத்தையும் சந்தோஷத்தையும், கேளிக்கையையுமே யளிக்கிறான்'' என்றான்.

முரு:—"அதோடு வெறியாட்டையும் சீர்கேட்டையுமளிக்கிறான்" என்றான்.

யாவும் கேட்டுக்கொண்டிருந்த எல்லப்பபிள்ளை "சந்திரன் நமது தானியமணிகளுக்குப் பாலூட்டுகிறானென்றும், விதைகளைப் பழுக்கச் செய்கிறானென்றும் பெரியோர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்" என்று தங்கள் வடநாட்டுப் பூர்வீகப் பாஷையில் கூறினான்.

அதைக்கேட்டதே அத்தீவின் தலைவனாகிய தைரிய நாதம்பிள்ளை "ஓ! நமது விவசாயி அன்னிய நாட்டுப் பாஷையைப் பேசுகிறார். இத்தீவில் ஒருவரும் இங்கு வழங்கும் இரண்டொரு பாஷைகள் தவிர வேறெந்தப் பாஷையையும் பேசுவதில்லை. ஆகையால் இவருக்கு இப்போது இன்னும் ஒரு பெரிய கிண்ணம் கலவைச் சாராயம் அளிக்கவேண்டும்" என்று கூறித் தன் தலைமைப் பரிசாரகனை யழைத்து "இவருக்குப் பெரிய கிண்ணத்தில் கலவை கொண்டுவா" என்று சற்று தடுமாற்றத்தோடு கூறினார். ஏனெனில் அந்நேரத்திற்கு அவரும் கொஞ்சம் அதிகமாகவே குடித்துவிட்டிருந்தார்.

எல்லப்பன் "அய்யோ! நான் இன்னும் குடிக்கும் நிலைமையிலில்லை. என் குடியிலிருந்து கொஞ்சம் வெளியில் எடுத்துவிட்டால் மிக்க நலமாக விருக்கும்" என்றான்.

**தைரியநாதம் பிள்ளை:**—சரி. அப்படியாயின் ஒரு பாட்டுப் பாடும்.

**எல்லப்பன்:**—"அய்யோ கடவுளே! நீதான் எனக்குப் பதில் பாடவேண்டும்" என்றான்.

அதற்குள் தலைமைப் பரிசாரகன் கலவைச் சாராயம் இருக்கும் ஒரு அகன்ற பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு வருவதை எல்லப்பன் கண்டான். பரிசாரகனும் தள்ளாடிக்கொண்டும் நடனம் செய்துகொண்டும் வருகிறான். ஏனெனில் அவனே யடிக்கடி யாவர்க்கும் சாராயம் கொண்டுவந்து வட்டிப்பவனானதால் அவன் பாடு அளவிற்குக்கொஞ்சம் அதிகமே யாய்விட்டது. எந்த விநாடியில் சாராயப்பாத்திரத்தைக் கவிழ்த்துக்கொண்டு வீழ்வானோ தெரியாது. அவனைக்கண்டதே எல்லப்பன் மிக்க திகிலடைந்து தன்னால் கூடியவரையில் சமாளித்துக்கொண்டு ஒரு பாட்டுப்பாட முயன்றான்.

எல்லப்பன் தைரியநாதம் பிள்ளையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் பாபம் கேளிக்கையான விருந்தில் முன்னமே அளவுமீறிக் குடித்திருக்கிறான். ஆயினும் நாம் அதிகமாகக் குடித்திருக்கிறோமென்ற உணர்ச்சி யவனுக்கிருந்தபடியாற்றான் இன்னும் குடிக்கமாட்டேனென்று மறுத்தான். அவன் பாடக்கூடிய நிலைமையிலில்லை. ஆயினும் அவனைப் பலவந்தப்படுத்தினால் என்ன செய்வான். பலவந்தம் செய்பவன் அத்தீவின் முதலாளி. அவன் வார்த்தைக்கு மாறு கூறுவது சரியல்ல. ஆகையால் தன்னாலான வரை பாடத்தொடங்கினான்.

"வெண்ணிலாவே! ஓகோ! வெண்ணிலாவே!
உன் வனப்பெவர் கூறுவார் வெண்ணிலாவே"

என்று பாடத்தொடங்கி வானத்தை நோக்கி உற்சாகத்தோடு கரங்களை நீட்டித் தலையைப் பின்னால்சாய்த்தபோது அளவுமீறிச் சாய்த்துவிட்டதால் நாற்காலி பின்னால் சாய்ந்து கவிழ்ந்துவிட்டது. அச்சமயம் எல்லப்பன் தப்பித்துக் கொள்ள ஒரு பக்கமாய்த் திரும்பியதால் நாற்காலி பக்கவாட்டில் சாய்ந்தது. அது பக்கத்திலிருந்த தைரியநாதம் பிள்ளையின் நாற்காலியின்மேல் மோதவே அதுவும் சாய்ந்தது. அச்சமயம் பரிசாரகன் எஜமான் அருகில் வந்து நின்றதால் தைரியநாதன் நாற்காலி அவன்மேல் சாய்ந்தது. இக்காரணங்களால் எல்லப்பன் தைரியநாதன் இருவரும் நாற்காலியோடு கவிழ்ந்து விழுந்து புரள, பரிசாரகன் சாராயப்பாத்திரத்தைக் கீழேபோட்டுக் குப்புறவிழுந்தான். அங்கிருந்த அனைவரும் கலீல் என்று நகைக்கத் தொடங்கினார்கள்.

கீழே வீழ்ந்தவர்கள் ஒருவரை யொருவர் வைது கொண்டு மெதுவாய் எழுந்திருக்கத் தொடங்கினார்கள். மற்றபேர் இனி இருப்பது சரியல்லவென்று கருதி எழுந்து

தமது அறைகளுக்குச் சென்றார்கள். பொழுதும் விடியத் தொடங்கியதால் இரவு கேளிக்கையும் முடிந்தது. மேல் நாட்டாருக்குள் நாளைக்கும் இத்தகைய கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் நடப்பது இயற்கையே. பகலில் உழைத்துப் பொருள் சம்பாதித்து, இரவில் கேளிக்கை யாய்க் காலத்தைக் கழிக்கவே நாம் ஜென்மமெடுத்திருக்கி றோம் என்பதே யவர்கள் கொள்கை. நம் முன்னோர்களில் ஒருவராகிய தாயுமானவர் "அந்தோ! நமது வாழ்க்கை முழுமையும் பொருள் தேடுவதும், நல்ல ஆகாரங்களை யுண் பதும், உறங்குவதுமாகவே முடிகிறதே, நாம் ஏன் ஜனன மெடுத்தோம்? நாமார்? இவ்வுலகம் என்ன? இதில் ஏன் நாம் இத்தகைய தொல்லைப்படுகிறோம்-இதிலிருந்து விடுதலை யடைவதெப்படி? கடவுள் என்பவர் எவர்? அவரை யடைவதெப்படி? என்னும் சிந்தனையேயின்றிக் காலத்தை மேல்கண்ட விதமாகக் கழிக்கிறோமே" என்று பிரலாபித்து நம்மனோர்க்குப் புத்தி கூறினார். மேல் நாட்டார்க்கோ அத்தகைய சிந்தனையே கிடையாது. அவர்கள் நோக்க மனைத்தும் இவ்வுலகத்தில் பல வழியிலும் புத்தி சாமார்த் தியத்தை யுபயோகித்துப் பொருளும் வல்லமையும் செல் வாக்குமடைந்து உலக போகங்களை நன்றாயனுபவிக்க வேண்டுமென்பதோடு முடிந்துவிடுகிறது. அத்தகையோ ரைப் பார்த்து அவர்கள் வழியே செல்ல முயலும் நம்மவரி லுள்ள சில மூட சிகாமணிகளுக்காகவே நாம் வருந்து கின்றோம்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் வந்திருந்த விருந்தாளி களுக்கெல்லாம் காலைப்போஜனம் வட்டிக்கப்பட்டது. அதற்காக முன்னடியே ஆயத்தம் செய்யப்பட்டிருந்த பல வகை இறைச்சிகளும், பட்சி வகைகளும், இன்னும் அவர் களுக்கு அனுபவமான பலவித ஆகார வகைகளும் பலவழி

களில் சமைக்கப்பட்டிருந்தன. அங்கு வந்திருந்தவர்களில் அனேகருக்கு அவர்கள் ஒருபோதும் உண்டறியாத அபூர்வமான உணவுப் பொருள்களெல்லாம் இருந்தன. ஆகவே ஒவ்வொருவரும் மனதாரத் தங்கள் தங்களால் கூடியவரையில் ஆகாரங்களை யுட்கொள்ளத் தொடங்கினார்கள்.

வசந்த மாளிகையில் நடந்தது போன்ற பெரிய விருந்தும் நடனமும் நடக்கிற இடங்களில் வருகிற விருந்தினருக்கெல்லாம் அவர்கள் ஆசாரப்படித் தனித்தனி அறைகள் அளிக்கப்படுவது வழக்கம். வசந்தமாளிகையிலோ அதிக அறைகளில்லை. வந்திருக்கும் விருந்தினரோ அனேகர். ஆகையால் ஒவ்வொருவர்க்கும் அளிக்க அறைகள் போதா - இதனால் காலைப்போஜனம் அருந்தியபின் ஆண்களும் பெண்களும் கலந்தேயிருக்கவேண்டும். பகற்போஜனமாகுமட்டும் இவ்வாறிருப்பதெனின் கஷ்டமே. வேடிக்கையாகக் காலங்கழிப்பதில் அவரவர்கள் போக்கு வயதிற்குத் தக்கபடி பலவிதமாக விருக்கும். வயது முதிர்ந்த மாதர்க்கு ஊர்ச்சங்கதிகளைப் பேசுவதே மிக்க சந்தோஷமான காலப்போக்கு. வாலிப கன்னிகைகளுக்குப் பாட்டுப்பாடுவதிலும் வாலிப ஆடவர்களிடம் சம்பாஷிப்பதிலும் பலவித விளையாட்டுகளை விளையாடுவதிலும் விருப்பம். அவ்வாறே ஆடவர்களிலும்.

இப்போது பகற்போசன வேளைமட்டும் எப்படிக் காலத்தைப் போக்கலாம், என்ன விளையாட்டுகளுக்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைப்பற்றித் தைரியநாதம் பிள்ளையும் மற்றவர்களும் ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள். இவர்களுக்கு எந்த வழியும் சரியாக அகப்படவில்லை. யாவரும் காலைப்போஜனத்திற்குப் பின் சாராயம் மிதமாக அருந்திவிட்டு இந்த யோசனையில் இறங்கினார்கள். எந்த விளையாட்டும் அச்சமயம் இவர்களுக்கிருந்த உற்

சாகத்திற்குத் தகுந்ததாகத் தோன்றவில்லை. இவ்வாறு இவர்கள் கலவரத்திலிருக்கும்போது பரிசாரகர்களின் தலைவன் ஆத்திரத்தோடு கையில் ஒரு எறியீட்டியைப்பிடித்துக்கொண்டு அவர்கள் முன் வந்து நின்று, "ஓ! நமது துறையருகில் குடாக்கடலின் வாயில் ஒரு பெரிய திமிங்கிலம் வந்து சிக்கிக்கொண்டிருக்கிறது" என்றான்.

இச் சங்கதியைக் கேட்டதே அங்குள்ளவர்கள் போட்ட சந்தோஷ ஆரவாரம் இத்தகையதெனக் கூறவொண்ணாது. மனிதர்களின் குணம், நடவடிக்கைகள், முதலியயாவும் அவர்களின் தேச இயற்கையினாலேயே யமைக்கப்பட்டிருக்கும். ஆதிகால முதல் இருக்கும் பழக்கப்படிக்குமேயிருக்கும். மேல்நாட்டாரனைவரும் ஆதியில் பூமியைப் பண்படுத்தி தானியங்களை யுற்பத்தி செய்யும் வழி யறியாதவர்களாகவே யிருந்தார்கள். ஆகையால் காடுகளில் கிடைக்கும் கீரைகள் கிழங்குகள் பழங்கள் முதலியவற்றோடு காட்டுமிருகங்களை வேட்டையாடிக் கொன்று, அவற்றின் மாமிசத்தை யவித்தும் சுட்டும் புசித்துக் காலங்கழித்து வந்தார்கள். கடலோரங்களிலுள்ளவர்கள் அவற்றோடு படகில் கடலில் சென்று மச்சங்களையடித்து அவற்றையும் மிருகங்களின் பாலில் அவித்தும் தீயில் பொசிக்கியும் தின்று கொண்டு காலங்கழித்தார்கள்.

வட கடலில் திமிங்கிலங்கள் ஏராளமாகவுண்டு. அத் தீவுகளிலுள்ளோர்கள் அத்திமிங்கிலங்களை வேட்டையாடுவதை யோர் பெரிய ஆடம்பரமான வேட்டையாகக் கருதுவார்கள். அதைவிடப் பெரிய கடல் வேட்டை கிடையாது. அத்திமிங்கில வேட்டை மிக்க கோரமானது. சற்றும் சீவகாருண்யமற்றது. எப்படியெனில் அனேகம் பேர் கும்பு கூடிக்கொண்டு ஐந்துபேர் ஆறுபேர்களாகப் படகுகளிலேறிக்கொண்டு அம்மீனைச் சூழ்ந்துகொண்டு

தாக்குவார்கள்; பாரமான எஃகு ஈட்டிகளை அதன்மேல் எட்டவிருந்து வீசுவார்கள். அந்த ஈட்டிகளின் கூர்மையான முனைகளின் இருபுறங்களிலும் எதிர்ப்பக்கம் கூர் திரும்பிய முனைகளிருக்கும்; அதனால் அந்த ஈட்டிகளை வெளியில் இழுத்தால் அவை சுலபமாகவரா; அந்த ஈட்டிகளின் மறுமுனை, அதாவது கைப்பிடியில் நீண்ட பலமான கயிறு கட்டப்பட்டிருக்கும். அக்கயிற்றின் ஒரு முனையைக் கையில் பற்றிக்கொண்டே ஈட்டியை வீசி யெறிவார்கள் அதில் பழக்கமுடையோரே யக்காரியத்தைச் செய்ய வேண்டும்.

இம்மாதிரி பல ஈட்டிகள் எறியப்பட்டபோது அப் பரிதாபமான திமிங்கிலம் அவற்றால் வேதனைப் பட்டுப் பன்முறை நீரில் மூழ்கி மூழ்கி வெளிக்கிளம்பி இரத்தம் கக்கிக் கடைசியில் ஆயாசமுற்றுப் பலமற்று இவர்களால் கரைக்கு இழுக்கப்பட்டுக் கொல்லப்படும். அதன் முதுகெலும்பு கணுக்கணுவாய் மற்ற மச்சங்களுக்குள்ளது போல் நீளக்கோக்கப்பட்டிருக்கும். அதன் ஒவ்வொரு கணுவும் சாதாரணமாய் ஒரு பிரமாண்டமான பிப்பாயைப்போலிருக்கும். அதற்குள் ஒருவித எண்ணெய் நிறைந்திருக்கும். அந்த எண்ணெயில் ஒருவித போதையிருப்பதால் அங்குள்ளவர்கள் அதையொரு உயர்தரமான மதுபானமாகக் கருதி யருந்துவார்கள். அதை விளக்கெரிக்கவும் உபயோகப்படுத்துவதுண்டு. இரஷியாவிற்கு வடக்கிலுள்ள கடலோரம் வசிப்போர் அதன் மாமிசத்தை வருடம் முழுமையும் அருந்துவார்கள்.

தைரியநாதம் பிள்ளையின் பரிசாரகன் வந்து ஒரு திமிங்கிலம் கடலோரம் வந்து சிக்கி யிருக்கிறதென்று கூறியதைக் கேட்டதே அங்கு வந்திருந்த விருந்தாளி

களெல்லாம் ஆனந்த பரவசராகி யுடனே யெழுந்தார்கள். தைரியநாதம் பிள்ளையின் வீட்டில் அந்த வேட்டைக்கு வேண்டிய ஆயுதங்களெல்லாம் ஆயத்தமாயிருக்கின்றன. ஏனெனில் அங்கு அப்போதைக்கப்போது அத்தகைய வேட்டை யகப்படுவதுண்டு. உடனே ஆயுதக் கிடங்கு திறக்கப்பட்டதும், அவரவர்கள் வேண்டிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு கடலை நோக்கிப் புறப்பட்டார்கள். இந்த வேடடையில் வாலிபர்கள் வயோதிகர்களென்றில்லை. யாவருமே படகுகளோடும், எறியீட்டிகள் பாலாக்கள் கண்ட கோடரிகள் முதலிய ஆயுதங்களோடும் புறப்பட்டார்கள்.

திமிங்கிலம் எப்போதும் மிக்க ஆழமான ஜலத்திலேயே இருப்பது. அதற்குப் போதுமான ஆழமில்லாவிட்டால் அது சஞ்சரிப்பது கஷ்டம். இப்போது கரையருகில் வந்து சிக்கிக்கொண்டிருக்கும் மீன் பிரமாண்டமானது. அது எப்படியோ தடுமாற்றமுற்றுக் கரையை நெருங்கி வந்து இரண்டு மணல் திட்டுகளுக்கிடையிலுள்ள ஜல சந்தி போன்ற வழியில் நுழைந்து கரையருகிலிருந்த ஒரு ஏரி போன்ற நீர் நிலையில் சிக்கிக்கொண்டது. அச்சமயம் திடீலென்று வந்த பெரிய அலை அத்திமிங்கிலத்தை அந்நீர் நிலையில் கொண்டுவந்து சேர்த்து விட்டது. இப்போது வேட்டையாடச் சென்ற அக்கூட்டத்திற்கு அத்தீவின் தலைவராகிய தைரியநாதரே படைத்தலைவராக அமர்ந்தார். இவர்கள் கூட்டத்தில் வயோதிகனுகிய பைரவி கிருஷ்ணப்பனும் எல்லப்பபிள்ளையும் குலசேகரனும் நமது முருகப்பனும் சேர்ந்திருந்தார்கள். இவர்களுக்கு இத்தகைய வேட்டையகப்படுவது பெரிய அதிஷ்டம். ஆகையால் இவர்கள் உற்சாகத்திற்கு அளவேயில்லை.

18656

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

### (2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் போவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இது வரையில் வெளிவாராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய **மூஷ்டிக்கரம்** என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. **இந்திராபாய்** பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், மூஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் **கிருஷ்ணராவ்** செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

(இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடி மீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடி மீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினாங், சிங்கப்பூர், செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.

---

Printed at the "Ananda Bodhini" Press, Madras.